பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 28 வியாழக்கிழமை (14-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:352

### குடாநாட்டு மீனவர் எட்டு துறைகளிலிருந்து

## இன்று முதல் 24 மணிநேரமும் கடல் சென்று எந்த நேரத்திலும் கரைக்குத் திரும்பலாம்!

### முகமாலை சந்திப்புக் குறித்து வீரசேகர உதயனுக்குத் தகவல்


யாழ்ப்பாணம்,நவ.14

காரைநகர், ஊர்காவற்றுறை, மாதகல், புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள எட்டு நிலைகள் ஊடாக மீனவர்கள் 24மணி நேரமும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி இன்று முதல் வழங்கப்படும்.

வடபிராந்தியக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முகமாலை சூனியப்பிரதேசத்தில் நேற்று நடந்த உப குழு கூட்டத்தை அடுத்து 'உதயனு'க்குப் பேட்டியளித்த போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

மீனவர்கள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடலில் எடுத்துக்கூறப்பட்டது. பல விடயங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது; சில விடயங்களில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.



பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீனவர்கள் மீதான நெருக்குதல்கள் குறித்து முக்கியமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. கடற்படையின் போராப் படகுகள் மீனவரின் வலைகளை அறுத்து சேதம் விளைவிப்பதாக முறைப்பாடு கூறப்பட்டது. இரவில் மீனவர் வள்ளங்களில் விளக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாடுகளற்ற மீன்பிடி: புலிகள் வற்புறுத்துகின்றனர்

முகமாலை,நவ.14

குடாநாட்டு மீனவர்கள், அவர்கள் வசிக்கும் கடற்பிரதேசங்களில் எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றி - சுதந்திரமாக - தமது தொழிலை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதிக்க வேண்டும்.

முகமாலையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் இதனை வற்புறுத்தினர்.

முகமாலை சூனியப்பிரதேசத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட ஒரு கொட்டகையில் இந்தக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருஹோவ்டே, இக்குழுவின் யாழ். (02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் படையணி பயிற்சியை முடித்தது

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் விசேட படையணி ஒன்று அண்மையில் தனது பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளது.

இந்த படையணியின் சாகச நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் ஆகியன எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பு பொது விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் ரமேஷ் இந்த சாகஸ நிகழ்வுகளுக்கு தலைமை வகிப்பார். (ஐ-4)

# புலித்தளபதிகள் இராணுவப் பகுதிக்குள் பிஸ்டல்கள், காவலர்களுடன் வரலாம்!



முகமாலையில் நேற்று பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் கடற்படையினரின் சார்பில் வடபிராந்தியக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் கடற்புலிகளின் சார்பில் கடற்புலிகளின் பிரதித் தளபதி லெப்.கேணல் செழியனும் கைலாகு கொடுக்கும் காட்சி. நடுவில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட் புருஹோவ்டே காணப்படுகிறார். மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில் *(படம்: தேவராஜன்)*

## அரசுடன் விரைவில் உடன்பாடு

முகமாலை,நவம்பர்14

**விடுதலைப் புலிகளின் தளபதிகள் அவர்களின் தற்பாதுகாப்புக்கான ஆயுதங்கள்(பிஸ்டல்கள்), மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் தரை, கடல், வான் மார்க்கங்கள் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று வர விரைவில் வசதி செய்யப்படவுள்ளது. இது தொடர்பான முத்தரப்பு உடன்பாடு ஒன்று விரைவில் எட்டப்படும் சாத்தியம் உள்ளது.**

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகரும், சமாதான செயலகத்தின் செயலாளருமான புலித்தேவன் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

முகமாலையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தின் இறுதியில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார.

பாதுகாப்பு உபகுழுவின் கூட்டங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டங்களில் புலிகளின் முக் கிய தளபதிகள் கலந்துகொள்ளவேண்டியுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்லும்போது அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதானால் அவர்களுக்கு விடுதலைப் புலிகளே பாதுகாப்பு வழங்கவேண்டும். முக்கிய தளபதிகளின் பாதுகாப்பு விடயத்தில் எமது இயக்கம் அலட்சியமாக நடந்துகொள்ளமுடியாது. குறைந் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியை முழுநேரமும் திறக்க அரசின் இணக்கம்தான் தேவை

### புலிகளின் பிரமுகர் புலித்தேவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

ஏ-9 பாதையை 24 மணி நேரமும் திறப்பதற்கான அனுமதியை எப்போதோ நாம் வழங்கிவிட்டோம். இனி அரசுதான் அந்தப் பாதையை 24 மணிநேரம் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக செயலாளர் புலித்தேவன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :-

ஏ-9 பாதையை 24 மணி நேரமும் போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் என்று பல அமைச்சர்களும், புத்தி (14ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு எதிரான கைது உத்தரவு விலக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.14

அனலைதீவைச் சேர்ந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் புஸ்பராசாவின் (லோகநாதன் மைக்கலின்) மரணம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் நிசாந்தன் என்பவரைக் கைது செய்வதற்கு உத்தரவிட்டிருந்த ஊர்காவற்றுறை நீதிமன்றம் அந்த உத்தரவை விலக்கிக்கொண்டுள்ளது.

மர்மமான முறையில் கடந்த சனியன்று உயிரிழந்த புஷ்பராசாவின் மரணம் பற்றிய விடயம் கடந்த ஞாயிறன்று ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. (14ஆம் பக்கம் பார்க்க)

## சிறை அதிகாரி ஒருவர் கைது!

கொழும்பு,நவ.14

வலல்லாவிட்ட பிரதேசசபைத் தலைவர் கொலை தொடர்பாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவர் கடமையில் இருந்த பொழுது விசேட பொலிஸ் குழுவினர் அவரைக் கைதுசெய்தனர்.

அவரை விசாரணை செய்த பொழுது, கொலைச்சம்பவம் குறித்து முக்கிய பல தகவல்கள் வெளிவந்தன என்று பொலீஸார் கூறுகின்றனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## மின்விசிறியை இயக்கியவர் மின்தாக்கிப் பலி!

யாழ்ப்பாணம்,நவ.14

மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த மின்விசிறியை (Table Fan) கையினால் திருப்பியவேளையில் மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பப் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் புங்கங்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்தப் பரிதாபச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான நியலதாசன் ஆன்மேரி றினோல்டா அல்லது ஜான்சி என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிற்பகல் 2மணியளவில் யாழ்.போதனா வைத்திய (14ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்துக்கு வரி அறவிடப்படமாட்டாது!

### நாடாளுமன்றத்தில் தகவல்; இன்று நிதியமைச்சர் விளக்குவார்

கொழும்பு,நவ.14

வெளிநாடுகளில் தொழில் செய்யும் இலங்கையர், இலங்கைக்கு அனுப்பும் பணத்துக்கு 15 வீதவரி அறவிடப்படும் என்று வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட யோசனையை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் கூடிய பொருளாதார கொள்கை குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார.

ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே எம்.பி.சபையில் கேட்ட கேள்வி ஒன் (14ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மூன்று இடங்களில் ஜே.வி.பி. அலுவலகங்கள் எரிப்பு

கொழும்பு,நவ.14

ஜே.வி.பியின் மூன்று பிரசார அலுவலகங்கள் நேற்று இரவு தாக்கியும் தீ வைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன. தலங்கம, பன்னிப்பிட்டிய, ஹோமாகம ஆகிய இடங்களிலுள்ள ஜே.வி.பி. அலுவலகங்களே இவ்வாறு அழிக்கப்பட்டிருக்கின்றன.

தலங்கம, பட்டகொட என்னும் இடத்திலுள்ள ஜே.வி.பி. அலுவலகம் நேற்று இரவு தீ வைத்து நாசமாக்கப்பட்டது. வாகனங்களில் வந்த பலர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டபடி அலுவலகத்தைத் தாக்கி, தீ வைத்தனர் என்று கூறப்படுகிறது.

கணனிகள் உட்பட அலுவலகத்துக்கு ஏற்பட்ட சேதம் 13 லட்ச ரூபா என்று ஜே.வி.பி. பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பன்னிப்பிட்டியிலுள்ள ஜே.வி.பி. அலுவலகம் நேற்று பகல் தாக்குதலுக்கு உள்ளானது. பின்னர் நேற்று இரவு வாகனம் ஒன்றில் வந்த சிலர் அந்த அலுவலகத்துக்குத் தீ வைத் (14ஆம் பக்கம் பார்க்க)



முகமாலையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட படைத்தரப்புப் பிரதிநிதிகள், கண்காணிப்புக் குழுவினர், புலிகள் தரப்புப் பிரதிநிதிகள்.







நேற்றைய கூட்டத்தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையில் கண்காணிப்புக்குழு, கடற்படை, கடற்புலிகள் ஆகிய முத்தரப்புகளின் பிரதிநிதிகளும் ஒப்பமிடுகின்றனர். *(படங்கள் : தேவராஜன்)*



# சமாதான முயற்சிகளை கடற்படையினர் குழப்பிவிட்டனர் என்ற நிலை வரக்கூடாது

## கடற்புலிகளின் பிரதித்தலைவர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,நவ.14


சமாதான முயற்சிகளை மதித்து கடற்புலிகள் செயற்பட்டு வருகின்றனர். இந்த முயற்சிகளை கடற்படையினர் குழப்பிவிட்டனர் என்ற நிலை வரக் கூடாது.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் பிரதித் தளபதி லெப்டினன்ட் கேணல் செழியன் தெரிவித்தார். முகமாலையில் நேற்று நடந்த சந்திப்புக்குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று நடந்த சந்திப்பில் கடற்படை அதிகாரிகளிடம் மேற்படி கருத்தை வலியுறுத்திக்கூறினேன். கடற்படைத்தளபதிகளுக்கும் எமக்கும் இடையில் நல்ல முறையில் பரஸ்பர உறவு நிலவியது. ஆ... வமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மக்களின் பிரச்சினைகளையே முன்வைத்துக் கலந்துரையாடினோம். கடற்பரப்பில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் கடற்கரையில் வாழும் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துக்கூறினோம்.

பல விடயங்களில் வாக்குறுதிகள் தரப்பட்டன. அடுத்து இடம்பெறும் கூட்டங்களில் இந்த விடயங்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டு, மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஏற்பாடு செய்வோம் - என் ...னார். (ம-3-8)





குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான குண்டு வீச்சின் ஒன்பதாவது ஆண்டு நினைவுதின நிகழ்ச்சி நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மறைமாவட்டக் குருமுதல்வர், பங்குத்தந்தையர்கள் நினைவஞ்சலி நிகழ்வுக்கு அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு ...அர்.எம்.ஜீ. நேசநாயகம் அடிகளார் நாடா வெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். குருநகர் ...த் தந்தை அருட்திரு. ஜெயசேகரம் அடிகளாரும் படத்தில் காணப்படு...ன்றார். *(படங்கள்: பத்மராஜ்)*

# கட்டுப்பாடுகளற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக அதிகாரி ஒலோ பெத்தம் ஆகியோர் முன்னிலையில் கடற்புலிகளதும், கடற்படைகளதும் தளபதிகள் கலந்துரையாடினர்.

கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் செழியன் விடுதலைப் புலிகளின் குழுவுக்கு தலைமை வகித்தார். கடற்புலித் தளபதிகளான லெப்.கேணல் சிறிராம், லெப்.கேணல் ரஞ்சன், வடமுனைக் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்ரினன்ட் கேணல் அறிவு, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் புலிகள் தரப்பில் பங்கேற்றனர்.

அரசுத் தரப்புக் குழுவுக்கு மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தலைமை வகித்தார். வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் ரத்னகீர்த்தி, யாழ். மாவட்ட பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, கடற்படைக் கப்டன் உடுவத்த, விமானப் படை குறூப் கப்டன் றோஹித குணவர்த்தன, 52ஆவது படையணித் தளபதி லெப்டினன்ட் கேணல் சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

உபகுழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் குறித்து முதலில் ஜெனரல் புருஹோவ்டே விளக்கிக்கூறினார்.

மீனவர் பிரச்சினை, விடுதலைப் புலிகளின் கடற்பயணத்தில் உள்ள பிரச்சினைகள், கடற்கரையோரங்களில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஆகிய விடயங்கள் குறித்தே நேற்று முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

கூட்டத்தில் கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் செழியன் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ மாதகல், காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் மக்கள் பெருமளவில் மீளக் குடியமரவில்லை. அந்தப் பகுதிகளில் 24 மணிநேர மீன்பிடிப்பதற்கு மனவர்களை அனுமதிப்பதால் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை.

★ குருநகர், பாஷையூர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் பெருமளவில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். அந்தப்பகுதி மக்கள் மீன்பிடிப்பதில் பல நெருக்குதல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் வள்ளங்கள் பறிக்கப்பட்டுள்ளன, வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இராணுவ முகாம் ஊடாக மீன்பிடிக்கச் செல்வதால் அவர்களது மனைவிமார், உறவினர்கள், மீன்பிடித் தொழிலுக்கு கூட்டாக உதவமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மீனவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த 24 மணிநேரமும் அவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டும்.

வடபிராந்திய கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் வீரசேகர, கடற்புலிகளின் துணைத் தளபதி லெப். கேணல் செழியன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் இன்னும் ஓரிரு நாள்களில் ஒன்றுகூடி இது விடயமாக ஆராய்வர் என்று முடிவு செய்யப்பட்டது. கண்காணிப்புக் குழுவினர் இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

கடற்புலிகளின் கடற்போக்குவரத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்தும் கூட்டத்தில் கடற்புலிகளின் தளபதி செழியன் எடுத்துக் கூறினார்.

கடற்படைத் தளபதியுடன் கலந்தாலோசனை நடத்தி இதற்குப் பதிலளிப்பதாக ரியர் அட்மிரல் வீரசேகர உறுதியளித்தார்.

ஒவ்வொரு பிராந்தியங்களிலும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தந்தப் பிராந்தியங்களில் கூட்டங்களை நடத்தி வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தந்தப் பிராந்தியங்களில் இராணுவம், கடற்படை ஆகியவற்றின் தளபதிகள், கடற்புலிகளின் பிரதிநிதி, புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும். கண்காணிப்புக் குழுவினர் இந்தக் குழுக்களை அமைப்பர்.

நாகர்கோயில் - பருத்தித்துறை வீதி போக்குவரத்துக்கு திறக்கப்படாததால் வடமராட்சி கிழக்கிலுள்ள மீனவர்கள், பொதுமக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அந்தப் பாதையை திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று செழியன் கோரிக்கை விடுத்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி தெல்லிப்பழையில் இடம்பெறும் கூட்டத்தில் இது பற்றி ஆராயலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'பாஸ்' நடைமுறையால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடற்படையினர் தனியான ஒரு பாஸும் இராணுவத்தினர் வேறு ஒரு பாஸும் வழங்குகின்றனர். மீனவர்களைக் குழப்பி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவுகாணப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கோரிக்கை விடுத்தார்.

மீன்பிடித் திணைக்களம் ஊடாக வழங்கப்படும் அனுமதி அட்டைகளை மட்டும் மீனவர்கள் வைத்திருந்தால் போதும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஏற்கனவே தெரிவித்துள்ளார். எனவே, மீன்பிடித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு இந்த விசேட அட்டைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுப்பதாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தெரிவித்தார்.

மக்களின் சுமுகமான வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளாதுவிட்டால் எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாததாகி விடும் என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

(ம-3-8)

## ஆயுதக் கண்காணிப்பு விவகாரம்:

# ஈராக் செல்லத் தயாராக ஐ.நா.அதிகாரிகள்; யுத்தத்துக்கு தயாராகும் அமெரிக்கப் படை!

## அதிபர் சதாமின் முடிவை எதிர்பார்க்கிறது சர்வதேச சமூகம்

லண்டன்,நவ.14

ஐ.நா.சார்பில் ஆயுத சோதனை அதிகாரிகள் ஈராக் நாட்டுக்குச் செல்லத் தயாராகிவிட்டனர்.

ஆயுத சோதனையை ஏற்குமாறு ஈராக்கைக் கோரும் ஐ.நா. தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதை ஏற்க ஈராக் நாட்டுக்கு நாளை வெள்ளிக்கிழமை வரை கெடு விதிக்கப்பட்டுள்ளது.

ஈராக் செல்லும் அதிகாரிகள் குழுவுக்கு சர்வதேச அணுவிசை நிறுவனத்தின் ஐ.நா. இயக்குநர் நாயகம் முகமது எல்பராடி தலைவராக இருப்பார். அநேகமாக குழு நாளை செல்லும் என்று தெரிகிறது.

ஈராக்கில் சோதனையிடவேண்டிய நூறு இடங்களின் பட்டியல் இக்குழுவிடம் உள்ளது.

குழு கட்டுப்பாடு ஏதுமின்றி நினைத்த இடத்தில் எல்லாம் சோதனையிட அனுமதிக்கவேண்டும், விஞ்ஞானிகளிடம் பேச அனுமதிக்கவேண்டும் என்று ஐ.நா. தீர்மானம் கூறுகிறது.

முகமது எல்பராடி முன்னதாக ஈராக் தூதர் அல் துயோரியைச் சந்தித்தார். இருவரும் சுமார் 30 நிமிடங்கள் பேசினர். ஈராக் ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை எல்பராடி அப்போது எடுத்துக்கூறினார்.

இதேவேளை, சோதனையை முழு அளவில் நடத்த ஈராக் அனுமதிக்கவில்லையெனில், போர்தான் பதிலாக இருக்கும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. அத்துடன் ஈராக் அருகே இரண்டரை லட்சம் இராணுவ வீரர்களை அமெரிக்கா நிறுத்திவைத்துள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஈராக் ரீ.வியில் ஒளிபரப்பப்படவில்லை. நாடாளுமன்ற முடிவை அறிய மக்கள் ஆவலுடன் ஆங்காங்கே காத்திருந்தனர். கத்தாரின் அல்ஜசீரா ரீ.வி. மட்டும் நாடாளுமன்ற நடவடிக்கையை ஒளிபரப்பியது. சாடிலைட் டிஷ்கள் நிறுவ ஈராக்கில் அனுமதி இல்லை.



தயார் நிலையில் அமெரிக்க யுத்தவிமானங்கள்.

அதனால், அல்ஜசீரா நிகழ்ச்சிகளை ஈராக் மக்கள் காண வசதி இல்லை.

ஈராக்கின் இறையாண்மை மதிக்கப்படவேண்டும் என்று கூறி முன்பு சதாமின அரண்மனையில் சோதனையிட ஈராக் மறுத்துவந்தது.

இதற்கிடையில் ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்த ஈராக் நாடாளுமன்றம் இது குறித்த இறுதி முடிவை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இதன்படி ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் நாளைக்குள் தனது முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்கின் இறையாண்மை மதிக்கப்படவேண்டும் என்று கூறியே முன்னர் தனது அரண்மனைக்குள் சோனையிட ஐ.நா. ஆயுத கண்காணிப்பாளர்களுக்கு அதிபர் சதாம் அனுமதி மறுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக்கை விட்டு வெளியேறியிருந்தனர். தற்போது மீண்டும் அதே விடயத்தில் ஆயுத பரிசோதனை விவகாரம் சிக்கலாகியுள்ளது.

ஐ.நா.தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு பிரச்சினைக்கு அதிபர் சதாம தீர்வுகாண்பரா என்று சர்வதேச சமூகம் ஈராக்கை நோக்குவது குறிப்பிடத தக்கது.

(ஒ)

## அமெரிக்கப் படைகள் மீது

# நச்சுவாயுக் குண்டுகளை பயன்படுத்த ஈராக் முஸ்தீபு?

வாஷிங்ரன்,நவ.14

நரம்புகளைப் பாதிக்கும் நச்சு வாயுவால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் 'அட்ரோபின்' என்ற மருந்தை ஈராக் பெருமளவில் இறக்குமதி செய்ய முயற்சிப்பதாகவும் -

இது அமெரிக்காவுடன் போர் மூண்டால் நச்சு வாயுக் குண்டுகளைப் பயன்படுத்த ஈராக் திட்டமிடுவதையே காட்டுவதாகவும் -

அமெரிக்க உள்நுறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் ஆயுத சோதனை மேற்கொள்ளும் ஐ.நா. தீர்மானத்தை ஈராக்கிய நாடாளுமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் இக்குற்றச்சாட்டு வெளிவந்துள்ளது. 12லட்சத்து 50 ஆயிரம் 'அட்ரோபின்' மருந்துக் குப்பிகளைத் துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக ஈராக் ஒப்புக்கொண்டுள்ளது. ஒருவருக்கு ஒருமுறை செலுத்தும் மருந்தினை ஒரு குப்பி கொண்டுள்ளது. இந்த அளவுக்கு பெருந்தொகையான 'அட்ரோபின்'னை இறக்குமதி செய்யும் இந்த நடவடிக்கையே ஈராக் மீது சந்தேகம்கொள்ள வைப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேசமயம், இந்த இறக்குமதிக் கோரிக்கை தொடர்பாக ஐ.நாவிடம் துருக்கி தெரிவித்துள்ளது.



அமெரிக்காவுடன் யுத்தம் மூளும் சந்தர்ப்பத்தில், தன்னிடம் உள்ள நச்சுவாயுக் குண்டுகளை அமெரிக்க இராணுவத்துக்கு எதிராக ஈராக் பயன்படுத்தக்கூடுமென்றும் -

அந்தவேளையில், நச்சுவாயுக் குண்டுகளை ஏவுவதற்கு முன்னர், ஈராக்கிய படையினரையும், பொது மக்களையும் நச்சுவாயுக் குண்டின் பாதிப்பிலிருந்து காப்பாற்றவே பெருமளவான 'அட்ரோபின்' மருந்தை ஈராக் களஞ்சியப்படுத்துவதாகவும்-

அமெரிக்க இராணுவத்துறை சந்தேகிக்கின்றது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்பாக வளைகுடா யுத்தத்தின்போது இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் ஈராக்கிடம் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அவற்றை பயன்படுத்துவதை அதிபர் சதாம் தவிர்த்துக்கொண்டார். ஆனால், தற்போது அதிபர் சதாமின் பதவி மற்றும் வாழ்க்கை ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த வேளையில் எவ்வித தயக்கமுமின்றி இரசாயன, உயிரியல் ஆயுதங்களை அமெரிக்கப் படைகள் மீது பிரயோகிக்க அதிபர் சதாம் பின்னிற்கமாட்டார். இவ்வாறு பி.பி.ஸி. செய்தியாளர் கருத்து வெளியிட்டார்.

ஈராக்கின் வர்த்தக நடவடிக்கைகள் ஐநாவால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால், மருத்துவத் தேவைக்குப் பயன்படும் 'அட்ரோபின்' இறக்குமதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருளகளின் பட்டியலுக்குள் இடம்பெறவில்லை. ஆகவே, தேவையான அளவு 'அட்ரோபின்'னை ஈராக் இறக்குமதி செய்வதைத் தடுக்கமுடியாது.

ஆதனால், இந்த வேளையில் ஈராக்குக்கு 'அட்ரோபினை' வழங்க வேண்டாம் என்று பிறநாடுகளிடம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கோலின் பவல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ)

# பலஸ்தீனப் பிரதேசத்திலிருந்து அரபாத்தை வெளியேற்றுவேன்!

## நெதன்யாகு ஆவேச வாக்குறுதி

ஜெருசலேம்,நவ.14



நெதன்யாகுவுடன் பிரதமர் ஷெரோன்

இஸ்ரேலியப் பிரதமராகத் தான் தெரிவு செய்யப்பட்டால் பலஸ்தீனப் பிரதேசத்திலிருந்து பலஸ்தீனப் தலைவர் யஸீர் அரபாத்தை வெளியேற்றுவதாக இஸ்ரேலிய வெளி விவகார அமைச்சர் பென்ஜூ மின் நெதன்யாகு வாக்கு றுதி அளித்துள்ளார். தனது தொலைக்காட்சி உரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் இஸ்ரேலியப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் வலது சாரிக்கட்சியான லிகுட் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்ற பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் போட்டியிடும நெதன்யாகு இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

"ஜனவரி மாதத் தேர்தலில் நான் பிரதமராகத் தெரிவானால் எனது முதல் நடவடிக்கை அரபாத்தை வெளியேற்றுவதாக இருக்கும். பலஸ்தீனத் தீவிர வாதிகளிடமிருந்து அரபாத்தைப் பிரித்து வெளியேற்றுவதே இஸ்ரேலின பாதுகாப்புக்கு ஒரே வழியாகும்" என்று நெதன்யாகு தனது உரையில் தெரிவித்தார்.

ஏற்கனவே சில தடவைகள் அரபாத்தைப் பலஸ்தீனப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவது பற்றி பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆராய்ந்தார். ஆனால், இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா கூட அரபாத்தை வெளியேற்றும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்காத காரணத்தால் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இந்நிலையில் அரபாத்தை வெளியேற்றும் விவகாரத்தை நெதன்யாகு தேர்தல் பிரசாரமாக்கிக் கொண்டுள்ளார். (ஒ)

# அரச குடும்ப அதிகாரியின் வீட்டுக்கு வெடிகுண்டு வீசியவர் சுட்டுக்கொலை!

## நேபாளத்தில் சம்பவம்

காத்மண்டு,நவ.14

நேபாளத்தின் அரச குடும்ப விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியின் வீட்டின்மீது வெடிகுண்டை வீசிய நபரை நேபாள இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். நேற்று இச் சம்பவம் நடந்தது.

நேபாள அரச குடும்ப விவகாரங்களைக் கவனிக்கும் 'பிரிவி' சபையின் தலைவர் கேஷ் ஜங் ராயமஜ்கி என்பவரின் வீட்டின்மீது வெடிகுண்டொன்றை வீசிய நபரே அங்கு காவலுக்கு நின்ற இராணுவக் காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த நபர் மாவோயிஸத் தீவிரவாதக் குழுவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் எவருக்கும் காயமேற்படவில்லை; சேதங்களும் ஏற்படவில்லை. தாக்குதலுக்குள்ளான வீடு நேபாளப் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு அடுத்த கட்டடத்தில் அமைந்துள்ளது.

நேபாள மன்னர் ஞானேந்திரா நாட்டின் நிர்வாக அதிகாரத்தைத் தான் பெறுவதற்கான நடவடிக்கையைக் கடந்த மாதம் மேற்கொண்டார். இதனைக் கண்டித்து மாவோயிஸ தீவிரவாதிகள் 3 நாள்கள் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர். அந்த வேலைநிறுத்தத்தின் மூன்றாவது நாளில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்போது வேலைநிறுத்தத்தின் போது இடம்பெற்ற வெவ்வேறு அசம்பாவிதங்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 6 ஆண்டுகளாக நேபாளத்தில் கம்யூனிஸ அரசொன்றை ஏற்படுத்த மாவோயிஸத் தீவிரவாதிகள் நடத்திவரும் ஆயுதப் போராட்டத்தில் இதுவரை சுமார் 7 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## பெய்ரூட்டில் குண்டுவெடிப்பு!

பெய்ரூட்,நவ.14

இரு அமெரிக்க உணவகங்களுக்கு வெளியே வெடி குண்டுகள் வெடித்தன. இதில் உயிர்ச்சேதம் ஏதும இல்லை. உணவகத்தின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின.

ஒரு குண்டுவெடித்து 30 நிமிடம் கழித்து இன்னொரு குண்டு வெடித்தது. அப்போது அந்த உணவகங்கள் மூடப்பட்டிருந்தன. (ஒ)

## திமிங்கிலங்களை கொல்ல அனுமதி

ஜப்பான் நாட்டுக் கடற்பகுதியில் ஏராளமான திமிங்கிலங்கள் உள்ளன. இவற்றை உணவுக்காகவும், ஆய்வுப் பணிக்காகவும் பெருமளவில் ஜப்பானியர்கள் வேட்டையாடி வந்தனர். திமிங்கிலங்களை வேட்டையாட சர்வதேச அமைப்புக்கள் தடை விதித்திருந்தன.

இந்த நிலையில், தடையை மீறி தனது கடற் பகுதியில் சுமார் 400 திமிங்கிலங்களை வேட்டையாட ஜப்பான் நாடு அனுமதி வழங்கியுள்ளது. ஆய்வுப்பணிகளுக்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஜப்பானிய அரசின் பேச்சாளர் தெரிவித்தார்.

# குறைந்த செலவில் விளக்கு கண்டுபிடித்தவருக்கு விருது!

கலிபோர்னியா,நவ.14

ஏழைகளின் வீடுகளுக்கு குறைந்த செலவில் விளக்கு வசதி செய்து கொடுத்துவரும் இந்தியாவைச் சேர்ந்த சமூக சேவகர் பங்கர் ராய் அமெரிக்காவைச்சேர்ந்த "தொழில்நுட்ப கண்டு பிடிப்பு அருங்காட்சியகம்" என்னும்

உலக அரங்கில்

அமைப்பின் விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கனடாவைச் சேர்ந்த "தி அல் பெர்ட்டா" என்ற சேவை அமைப்பு மற்றும் மேலும் மூவருக்கு அவ்விருது வழங்கப்படுகின்றது.

உலக மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய தொழில்நுட்பங்களைச் சிறப்பாகச் செயற்படுத்தும் தனிநபர்கள், அமைப்புகளுக்கு அவ் விருது வழங்கப்படுகிறது.

ராஜஸ்தானைச் சேர்ந்தவர் பங்கர் ராய். சூரியஒளியைப் பயன்படுத்தி விளக்கு உள்ளிட்ட சாதனங்களை இயக்குதல், மழைநீர் சேகரிப்பு உட்பட ஏழைகளுக்கு பல்வேறு அம்சங்கள் தொடர்பான தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொடுப்பதில் பங்கர் ராய் ஈடுபட்டுள்ளார்.

59 நாடுகளைச் சேர்ந்த 460 பேரின் பெயர்கள் இவ்விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டு இருந்தன. (ஒ)

## ஜப்பான் மீது சீனா பாய்ச்சல்!

பெய்ஜிங்,நவ.14

திபெத்திய மதத் தலைவர் தலாய் லாமாவை ஜப்பானிய கபினெட் அந்தஸ்த்தில் உள்ள அதிகாரிகள் சந்திப்பதற்கு சீனா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

- இவ்வாறு சந்திப்பது சீனாவின் திபெத் கொள்கைக்கே விரோதமானது என்று சீனாவின் வெளியுறவுத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

(ஒ)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு கடன் அடிப்படையில் மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம்,நவ.14

கிராம உத்தியோகத்தர்களுக்கு கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கப்படவுள்ளது.

இத்தகவலை உள்நாட்டலுவல்கள், மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள மோட்டார் சைக்கிள்கள் இந்தியாவில் இருந்து தருவிக்கப்படவுள்ளன.

மோட்டார் சைக்கிளை ஏற்கனவே வைத்திருப்பவர்களுக்கும், கடனடிப்படையில் அவற்றை ஏற்கனவே பெற்றுக்கொண்டவர்களுக்கும் இவை வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு
08
-
05
-
1921



உதிர்வு
06
-
11
-
2000

### அமரர் நாகலிங்கம் கந்தையா

*(E.N.K., நாரந்தனை)*

திதி: 14-11-2002

*உங்கள் நினைவு - எங்கள்*
*உயிருள்ளவரை இருக்கும் ஐயா.*

*55A, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* *(C/24858)* - குடும்பத்தினர்.

## பட்டினிக்கெதிரான நிறுவனம் உதவி

வலி.தெற்கு,நவ.14

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமரும் குடும்பங்களின் புனர்வாழ்வுக்கு உதவும் முகமாக் பட்டினிக்கெதிரான நிறுவனம் பல்வேறு உதவிகளை வழங்கமுன்வந்திருக்கிறது.

மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளில் இருந்தும் உதவி வழங்குவதற்கு பொருத்தமான குடும்பங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்படும் இக்குடும்பங்கள் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக, விவசாய உபகரணங்கள், பசளை வகைகள், விதைகள், கிருமி நாசினிகள் என்பவற்றைப் பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்கவுள்ளது. (ஐ-152)

## சேவைக்கால செயலமர்வு

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் நடன பாடம கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வு 16ஆம், 17ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## வாராந்த வெள்ளி நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் இவ்வார நிகழ்வாக திருமதி ரி.குணபாக்கியத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் க.அருள்லிங்கம் நிகழ்த்துவார்.(ஓ)


## “இரட்டை நட்சத்திரம்”(TWO STAR) கூரை ஓடுகள் மீண்டும் யாழ். மண்ணில் விற்பனைக்கு வந்துள்ளன

ஐம்பது (50) வருடங்களுக்கு மேலாக எல்லோரது ஏகோபித்த நன்மதிப்பினைப் பெற்றதும், பல திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுவதுமான இரட்டை நட்சத்திரம் (TWO STAR) ஓடுகள் மக்களின் நன்மைகருதி யாழ்.மண்ணில் மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளன. போலிகளை வாங்கி ஏமாறாது, ஓட்டின் மேற்பகுதியில் இரட்டை நட்சத்திரத்திற்கு மேல் DULUX MODEL என ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ள எமது வியாபாரக் குறியினை (TRADE MARK) அவதானித்து வாங்கவும்.

யாழ்.மாவட்டத்தில் ஏக விநியோகஸ்தர்களாக கீழ்க்காணும் முகவர்களை நியமித்துள்ளோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முத்துக்குமரன் ஹாட்வெயார்ஸ்
*258, 260, கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

கனகலிங்கம்
*இருபாலை வீதி,*
*கோண்டாவில்.*

D.L.PERERA
*ST.REETA TILE FACTORY,*
*ANG... WAIKKAL.* (10584)

PRINCE துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ்

நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
S-I செண்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 433779 பெக்ஸ்: 446554
296, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு
16
-
12
-
1956



உதிர்வு
26
-
10
-
2001

### திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா புனிதவதி

திதி: 14-11-2002

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே!*
*இன்றுடன் ஓராண்டு ஆயிற்றோ உமை நாம் பிரிந்து?*
*என்றும் உமது திருமுகந்தான் எம்முன்னே தெரியுதம்மா!*
*ஒன்றும் அறியா உள்ளங்களைத் தவிக்கவிட்டது ஏனம்மா?*

இன்று (14.11.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழுகின்ற எமது அன்பு அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வியாபாரிமூலை,*
*பருத்தித்துறை.* (10590)

ஸ்ரீ.சுரேஷ்குமார்
(சுரேன் - மகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை
மடியில்
09
-
12
-
1968



ஆண்டவன்
அடியில்
15
-
10
-
2002

### திருமதி சூரியஜீவன் குகானந்தி

ஆவி ஆய எங்கள் மைத்துனி
ஆவி நீங்கி அடங்கினார் என்று
செவிப்பறை புகுந்த துயரச் செய்தி
பொய்யா காதோ...! எங்கள் மூச்சாய்
இருந்துதன் பேச்சால் பாச ஊற்றால்
இந்நிலம் தன்னில் எம்மை உயர்த்தி
வைத்த எங்கள் மச்சாள் போனார்
என்ற துயரச் செய்தி பொய்யாகாதோ!

*முகவரி:*
*33, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை.* (10587)

பிரிவால் துயருறும்:
சின்னமாமா, சின்னத்தை,
சயந்தன், சுதன், சயந்தி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை (பாக்கியம்) அவர்கள் 13.11.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் துரைரத்தினத்தின் (முன்னாள் அதிபர், மட்டுவில் தெற்கு, அ.மி.த.க. பாடசாலை) பாசமிகு தாயாரும் பாக்கியம் துரைரத்தினத்தின் அன்பு மாமியாரும் சிவசுதன் (கனடா), சிவசுகுனா, சிவசுபைதா, சிவசுதனி, ரேவதி (கனடா), சந்திரகாந்தன், ஸ்ரீகணேசன் ஆகியோரின் பேர்த்தியும் சுதனா, றொபீனா, பிரியந்தா, பானுஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.11.2002) புதன்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (10585) ஏகமகன் க.துரைரத்தினம்.

### கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

*(கணபதி கணேசன் - செம்பருத்தி பப்ளிகேஷன், மலேசியா)*

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், மணல்தரை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது மலேசியா செம்பருத்தி பப்ளிகேஷனில் பத்திரிகையாளராகவும் பணிபுரிந்துவந்தவரான கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் நேற்று(13.11.2002) புதன்கிழமை காலை 2.30 மணியளவில் இந்தியாவில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*இல.70, மணல்தரை ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (10595)

திருமதி கௌரி கணேசலிங்கம் *(மனைவி)*
க.யதுநந்தன் *(மகன்)*

உதயன்

# ஜே.வி.பி. குறித்து முன்னெச்சரிக்கை அவசியம்

ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) அண்மைக்காலப் போக்குக் குறித்து பல தரப்புகளி லும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுவந்தது.

இடதுசாரிப்போக்கை வெளிப்படுத்திவந்த அந்த அமைப்பு, மறுபுறத்தில் பச்சை இனவாதம் கக்கி வருவது பலரையும் விசனத்துக்கு உட்படுத்தியது.

அதுவும் இரண்டு தசாப்தகாலக் கொடூரப் போரால் சீரழிந்து போயிருக்கும் நமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி, அமைதியை நிலை நாட்டி, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான - கடைசி - பொன்னான வாய்ப்பு நமக்கு இப்போது கிடைத்திருக்கின்றது.

கடந்தகால கசப்புணர்வுகளை மறக்கச் செய்து, இன நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் இறுகக்கட்டி வளர்த்து, அமைதித் தீவை நோக்கி நாடு நெடும்பயணம் புறப்பட்டுள்ளவேளையில் அதற்குக் குறுக்கே பாய்ந்து தடுக்க முயல்கின்றது அந்த அமைப்பு.

பேரினவாதப் பேச்சும், விஷம் கக்கும் பிரசார மும், இனக்குரோதத்தை வளர்க்கும் அறிக்கை களும் என்று தினசரி சமாதான முயற்சிகளுக்கு எதிரான தனது கணைகளைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது ஜே.வி.பி.

"கடந்த இருபது வருடங்களாக வீசிய யுத்த சூறாவளியின்பின் இப்போதுதான் நாட்டில் அமைதி யும் நிம்மதியும் ஏற்பட்டுள்ளன. மீண்டும் இனவாதம் பேசி நாட்டில் இரத்தக் களரியையும் அமைதி யின்மையையும் ஏற்படுத்த முனையவேண்டாம்" - இப்படி ஜே.வி.பியினருக்கு நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

இதேசமயம், நாட்டில் மூன்றாவது கிளர்ச்சிக்கு சதித்திட்டம் தீட்டப்படுவதாக உள்துறை அமைச் சர் ஜோன் அமரதுங்க எச்சரித்திருக்கின்றார்.

"அத்தகைய முயற்சி எடுக்கப்பட்டால் அதனைத தயவு, தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்து முறியடிப்போம்; கடந்த காலங்களைப் போன்று முளையிலேயே கிள்ளி எறிவோம்" - என்றும் அவர் சூளுரைத்திருக்கின்றார்.

1971இல் ஒரு தடவை ஆயுதம் ஏந்தி அரசைக் கவிழ்க்க ஜே.வி.பியினர் கிளர்ச்சி செய்தனர். அது ஆயுத முனையில் அடக்கப்பட்டது.

1987-1990களிலும் இதேபோன்ற கிளர்ச்சியில் மீண்டும் ஈடுபட்டனர். அதுவும் அரச படைகளால் மூர்க்கமாக அடக்கப்பட்டது.

அவற்றுக்குப் பின்னர்தான் மூன்றாவது கிளர்ச்சி பற்றிய எச்சரிக்கை, அரசின் முக்கிய அமைச்சரால்- உள்நாட்டு பந்தோபஸ்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சரால் - நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய கிளர்ச்சிக்கு முன் மக்கள் மத்தியில் - தெற்கு சிங்கள மக்கள் மத்தியில் - தங்களது செல்வாக்கை உயர்த்திக்கொள்வது கிளர்ச்சி நடவடிக்கையில் முன்னேறுவதற்கு உதவும் என்று ஜே.வி.பி. கருதியிருக்கக்கூடும்.

ஜே.வி.பி., இப்போது மிகத் தீவிரமாகக் கிளப்பி வரும் இனவாதப்போக்கை இந்தப் பின்னணியில் ஆராய்வது - புலன்விசாரணை செய்வது - சம்பந் தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும்.

தெற்கில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவ தற்கு ஜனநாயக வழிகளில் ஜே.வி.பி. முயன்றால் அதை விமர்சிக்கலாம். ஆனால், தடைசெய்யக் கூடாது; தடைசெய்யவும் முடியாது.

ஆனால், ஆட்சி அதிகாரத்தை வேறுவழிகளில் கைப்பற்ற முயல்வதோ - அதற்காக இனவாதத் தைக் கிளப்புவதோ - அல்லது சமாதான முயற்சி களை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, தென் பகுதி சிங்கள மக்களைத் தவறான வழியில் திசை திருப்பி, குழப்பத்தை ஏற்படுத்தி, மீண்டும் கிளர்ச் சிக்கான சாதக நிலையை உருவாக்க முயல் வதோ - அனுமதிக்கப்படமுடியாதவை. இது குறித்து அரசும், உள்நாட்டு பந்தோபஸ்துக்கு பொறுப்பானவர்களும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மீண்டும் ஜே.வி.பிக்கு எதிராகத் தடை விதிக்கப்படும் நிலையை அது ஏற்படுத் தலாம்.

தலைக்கு மேல் வெள்ளம் வந்த பின்னர் தவிர்க்க முயல்வதில் அர்த்தமில்லை.



நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், பிரிட் டிஷ் நாடாளு மன்றின் இலங்கை விவகாரங்களுக் கான குழுவின் தலைவர் நசேபி பிரவு மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமர்ந் திருப்பதைப் படத்தில் காண லாம்.

(படம்: வசந்தன்)

# யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக நாடாளுமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன்

## யாழ்ப்பாணம் வந்த பிரிட்டிஷ் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

கடந்தகால யுத்த அனர்த்தங்களையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நேரில் கண்டறிந்து செல்லவே நான் இங்கு வருகைதந்தேன். நான் கண்டறிந்த விடயங்களையும் நீங்கள் எடுத்துக்கூறிய விவரங்களையும் பிரிட்டிஷ் நாடாளுமன்றுக்கு அறிக்கையாகச் சமர்ப்பிப்பேன்.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றின் இலங்கை விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் நசேபி பிரபு தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதி பர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலர்கள், செயலக அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இதன்போது அரச அதிபர், பிரதேச செயலர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களின் இணையப் பிரதிநிதிகள் ஆகியோரால் குடாநாட்டின் பல்வேறு விடயங்கள் மற்றும் தேவைகள்பற்றி நசேபி பிரபு விடம் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களும் கலந்துகொள்வதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் அவர் கள் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டிருப்பதால் நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொள்ளவில்லை.

(ம-10-5)

# ரூபா 80 ஆயிரம் பெறுமதியான எழுந்தருளி விக்கிரகங்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,நவ.14

நாவற்குழி சித்திரவேலாயுதர் ஆலயத்தில் கடந்த வெள் ளிக்கிழமை இரவு மிகவும் தொன்மை வாய்ந்த எழுந்தருளி விக்கிரகங்கள் திருட்டுப்போயுள்ளன.

சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த முருகன் மற் றும வள்ளி விக்கிரகங்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இசம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலீஸார் ஆலயத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பின்பு ஆலயக் கதவுகள் யாவும் நீண்டகால மாகத் திறந்த நிலையிலேயே இருந்தன. அண்மையில்தான் இக்கதவுகள் சரிசெய்யப்பட் டுப் பூட்டப்பட்டன.

அதன் பின்னரே - கந்தசஷ்டி உற்சவகாலத்தில் - இத் திருட்டு இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது. (ம-10)

# மீளக்குடியமரும் மக்களுக்கு அரசின் உதவி போதுமானதல்ல

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.குடாநாட்டில் வீடொன்றைப் புதிதாகக் கட்டுவதற்கு சுமார் 10 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. இவ்வாறான நிலை யில், இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் யுத்தத்தினால் அழிவுற்ற தமது வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கத்தினால் வழங் கப்படுகின்ற 50 ஆயிரம் ரூபா எந்தவகையிலும் போதுமானதாக இல்லை.

- இவ்வாறு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தெரி வித்துள்ளார். நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இலங்கை விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் நசேபி பிரபுவிடமே அரச அதிபர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஏ-9 தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்பு இதுவரையில் ஒரு லட்சம் பேர் இங்கு மீளக்குடியமர் வதற்காக வருகை தந்துள்ளனர். ஆனால், இவர்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நிதிவசதி இல்லா மல் உள்ளது.

மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்கும் கடலுணவுகளை வெளியிடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும் போதிய வசதிகள் இல்லாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-10-5)

# குடாநாட்டுக்கான உதவிகளை உடன் மேற்கொள்ளவேண்டும்

## -ஜெனீவாவில் இருந்துவந்த அதிகாரியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.குடாநாட்டுக்கு வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் வந்து செல்வதோடு மட்டும் நின்றுவிடாது உதவி நடவடிக்கை களையும் உடன் மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு ஜெனீவாவில் இருந்து வருகைதந்த அகதிகளுக் கான ஐ.நா.தூதரக பிரதிநிதியான எம்.கோட்டற்றிடம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

யாழ்.நிலைமைகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக குடாநாட்டுக்கு வருகைதந்த அவர், நேற்று அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார். அப்போது அவரிடம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகள் நிறையவே உண்டு. எனினும், எந்தவித உதவிகளும் வந்துசேராமையால் அபிவிருத்திப் பணிகள் எல்லாம் தொடங்கமுடியாத நிலையில் உள்ளன. வெளிநாட்டு நிறுவனங்கள் வந்துசெல்வதோடு நில் லாது உதவி நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளவேண் டும்.

போரினால் சேதமடைந்துள்ள யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் ஏராளமாகச் செய்யவேண்டி உள்ளது. அவற்றிற்கு வெளிநாடுகளிடம் இருந்து கிடைக்கும் நிதி உதவி போதியதாக இல்லை.

பல வெளிநாட்டு அமைப் புக்கள் பல்வேறு உதவிகளை யும் செய்வதாக உறுதியளித் துள்ளபோதிலும் எந்தவித உதவிகளும் இதுவரை கிடைக கப்பெறவில்லை.

குடாநாட்டில் தற்போது பல அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திபற்றி ஆராயவந்துள்ள நீங் கள் இங்குள்ள உண்மை நிலையை உலகிற்குணர்த்த வேண் டும்.

குடாநாட்டில் மீள்குடியேற்றம், விதவைகளுக்கான உதவி கள், சுகாதார அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி முதலா கப் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் செய்யப்படவேண்டி உள்ளன.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள இன்னமும் அகதி முகாம்களில் வசித்து வருகின்றன. இத்தகைய பிரச்சினைகள் முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்படவேண்டியுள்ளன.

யாழில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதி மற்றும் உதவிகளையும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கவேண்டும் என்று அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் தெரிவித்தனர். (ம)



நேற்று அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைமையகத் தில் இடம்பெற்ற கூட்டத்தில் ஜெனீவாவிலிருந்து விஜயம் மேற் கொண்ட அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதி எம்.கோட்டற் (Houtart) ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதி ஜீ.யோகாநந் (வலது) ஆகியோரையும் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம். (படம்: எம்.பத்மராஜ்)

### நாளை

ஐப்பசி 29

வெள்ளிக்கிழமை

(15.11.2002)

திதி : ஏகாதசி

நள்ளிரவு 11.56 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

முற்பகல் 8.27 வரை.

உத்தான ஏகாதசி விரதம்

சுபநேரம் : 6.07 - 7.37

ராகுகாலம் : 10.37 - 12.07

(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நூல்கள் இல்லாத இல் லம் பலகணிகள் இல்லாத ஓர் அறையைப் போன்றதா கும்.

## 31ஆம் நாள் நினைவலைகள்



கச்சாய்க் கிராமத்தை
வதிவிடமாகக் கொண்ட
கச்சாய் விறுமர் ஆலய தர்மகர்த்தா

**அமரர் முருகேசு கார்த்திகேசு**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அமரரை நினைந்து அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போமாக.

- நண்பர் குழாம்.

*வினோபா சனசமூக நிலையம்,*
*வினோபா நகர், கச்சாய்.* (10572)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 14 - 10 - 1934



உதிர்வு 15 - 10 - 2002

### அமரர் முருகேசு கார்த்திகேசு

மேகங் கறுக்கவில்லை மின்னலிடி எழவுமில்லை
காகங் கரையவில்லை கனவில்லை - தேகந்தான்
தளர்ந்து படுக்கவில்லை தயவில்லாதோர் வயிற்றுவலியினால்
வளர்ந்தனையோ வல்லவனே நீ?

15.10.2002 அன்று இறைபதமடைந்த முருகேசு கார்த்திகேசு அவர்களின் இறுதிக்கிரியைகளில கலந்து கொண்டவர்கள், வைத்தியசாலையில் பல்வேறு உதவிகளை நல்கியவர்கள், அனுதாபச் செய்திகளை நேரிலும் வேறுவழிகளிலும் தெரிவித்தவர்கள், இறுதியாத்திரையில் மயானம்வரை அனைத்து உதவிகளையும் நல்கியவர்கள், எமது துன்பத்தில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்கள, மரணக்கிரி...களை நடத்திய அந்தணப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று(14.11.2002) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், விறுமர் ஆலய அடியார்கள், தொண்டர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - சரஸ்வதியும்,
திருமதி பேரம்பலம் நாகமுத்துவும்,
பிள்ளைகளும், மருமக்களும்,
திரு. திருமதி திருலோகநாதன் குடும்பமும்.

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.*

தகவல்: த.கந்தையா(மருமகன்)
கச்சாய் வீதி, கொடிகாமம். (10575)

## கொள்கை வீரன் கொழுந்தாகிவிட்ட ஆறாம் ஆண்டின் நினைவாக

மழலையாக 16 - 05 - 1973



மாவீரனாக 14 - 11 - 1996

### மேஜர் றெனோ / செம்மலை
**(துரைராஜா திலகேஸ்வரன்)**
**(உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)**

தமிழீழத்தில் காரிருள் சூழ்ந்த வேளை
மதி முகமே மறைந்தது ஏனோ?
புன் சிரிப்புத் தவழும் புது மலரே - திலக்
புலிப்படைப் பயிற்சி ஆசானே!
தாயக அணியின் அணித் தலைவனே!
பண்டிதர் படையணித் தளபதியே!
எங்கே சென்றாய் - றெனோ?
நற்பண்பின் உறைவிடமே!
நல் தோழனே சோதரனே!
எங்கு சென்றாய் றெனோ?
துன்பம் வரினும் சிரித்த முகம்
கோணாது அண்ணன் பெயர் சொல்வாயே
விழுப்புண் அடைந்து
துயர் காங்காது துடித்த வேளையிலும்
அழைத்தாயே உன் தோழரை
எங்கு சென்றாய் - றெனோ?
நீ பழகிய உறவுகளின்
முகங்கள் இன்னும் துயர் ஆறவில்லை
யாரை யார் தேற்றுவது?
சென்ற இடம் எது செம்மலையே?

"இதுவரை தாயக விடுதலைப் போரில் வித்தாகிப் போன அனைத்து மாவீரச் செல்வங்களையும் நினைவு கூருகின்றோம்.

*தற்காலிக முகவரி.*
*புதுக்குடியிருப்பு,*
*வன்னி.* (10554) - குடும்பத்தினர்.

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.14

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு 'மிண்டு மனத்தவர் போமின்கள்' என்ற பொருளில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவார். (ஓ)

## 'சிஹல உறுமய' கட்சி நாடு முழுவதும் கருத்தரங்குகள்

'நாடு புலிகளின் வாயில்...' எனும் தலைப்பில் நாடுமுழுவதும் பல்வேறு கருத்தரங்குகளை நடத்த இருப்பதாக 'சிஹல உறுமய' கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் அரசு கொண்டுள்ள தொடர்பினால் நாடு எதிர்நோக்கவுள்ள அரசியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து இந்தக கருத்தரங்குகளில் விளக்கமளிக்கப் படவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கருத்தரங்கு இன்று கண்டி டி.எஸ்.சேனநாயக்க மண்டபத்திலும், 16 ஆம் திகதி கம்பஹாவிலும், 17 ஆம் திகதி களுத்துறையிலும், 28 ஆம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்திலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (ஐ-12)

## சனசமூக நிலைய மூலதன நன்கொடை

யாழ்ப்பாணம்,நவ.14

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 68 சனசமூக நிலையங்களுக்கு மூலதன நன்கொடை விரைவில் வங்கிமூலம் வழங்கப்படவுள்ளது.

பிரதேச சபை ஊடாக சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கைப் படிவத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச சபையில் ஒப்படைக்குமாறு உள்ளூராட்சி உதவியாளர் கேட்டிருக்கிறார்.

பரிசோதனை அறிக்கை கிடைக்...விடில் நன்கொடை வழங்கப்பட...து என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
Access Graphics

ஏக முகவர்கள்:
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 - 05 - 1925



விண்ணில் 24 - 11 - 1997

### திருமதி இராசம்மா முருகேசு
(முன்னாள் பாதுகாவலர் பெண்கள் கேணி, கீரிமலை)

திதி: 14-11-2002

ஆண்டுகள் ஐந்து மறைந்திடினும்
உம் நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
என்றென்றும் நெஞ்சைவிட்டு அகலாத நினைவுகளுடன்:

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.* (10549)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 ✦ 05 ✦ 1925



இறைவன் அடியில் 14 ✦ 11 ✦ 2000

### அமரர் சின்னத்தம்பி கந்தையா மயில்வாகனம் J.P.
*(முன்னாள் நகரசபைத் தலைவர், சாவகச்சேரி)*

ஆண்டுகள் இரண்டும் ஆயிற்றே அந்தோ உமைப் பிரிந்து
மாண்டுநீர் போனதால் மனை செயலிழந்து போயிற்றே
துணைடாமணி விளக்காய் திலங்கிய உமை நினைந்து
ஈண்டுங்கு நாம் தவிக்கின்றோம் திருமுகம் காணாமல்!

*ஹென்ஸ்மன் வீதி,*
*சாவகச்சேரி.* (10577)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மீண்டும் இனவாதம் கக்கி நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தாதீர்கள்!



## ஜே.வி.பியினரை எச்சரிக்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்

கடந்த இருபது வருடங்களாக வீசிய யுத்த சூறாவளியின் பின் இப்போதுதான் நாட்டில் அமைதியும் நிம்மதியும் ஏற்பட்டுள்ளது. மீண்டும் இனவாதம்பேசி நாட்டில் இரத்தக் களரியையும் அமைதியின்மையும் ஏற்படுத்த முனையவேண்டாம் என ஜே.வி.பியினருக்கு எச்சரிக்கை விடுத்தார் இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன்.

வரவு-செலவுத்திட்ட உரை மீதான 5ஆவது நாள் விவாதத்தில் நேற்றுமுன் தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கடந்த எட்டு வருடங்களாக இந்த நாட்டில் கொடுங்கோல் ஆட்சிபுரிந்து பல்லாயிரம் தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் அழித்தொழிக்கப்படுவதற்கு காரணமாக இருந்த அம்மையாருக்கு இன்று விழா எடுத்தனர்.

அந்த விழாவில் கலந்கொண்டு விட்டுவந்த மப்பில் பொ.ஐ.முன்னணி உறுப்பினர் திஸ்ஸ கரலியந்த இங்கு வந்து அம்மையாரின் புகழ்பாடுகின்றார்.

கடந்த எட்ட வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பொருளாதாரம் முடக்கப்பட்டது. கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, அபிவிருத்தி எல்லாமே மறுக்கப்பட்டன. கோடானுகோடி ரூபா பெறுமதியான எமது உடைமைகள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் காணிகள் பாதுகாப்பு என்ற பெயரில் அபகரிக்கப்பட்டன. எமது மீனவர்கள் கடலுக்குச் சென்று தமது தொழிலைச் செய்ய விடாமல் தடுக்கப்பட்டனர். பொதுமக்கள் சுதந்திரமாக வீதியில் நடமாட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டது.

எமது மக்கள் பசி, பட்டினியால் செத்து மடியும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்றும் பல்லாயிரம் தமிழர்கள் அகதி முகாம்களிலேயே இருக்கின்றனர்.

கடந்த இருபது வருடங்களாக இந்த நாட்டை ஆட்சிபுரிந்த இரண்டு கட்சிகளுமே இதற்கு பொறுப்புத்தான்.

இப்போதும் கூட அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் எமது மக்கள் பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்பிவிட்டனர். ஆனால், அரசபடையினரோ இன்னும் ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு எமது மக்களைத் துன்புறுத்துகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் அரச படையினர் அட்டூழியங்களைப் புரிகின்றனர். அங்கே தமிழர்களும் முஸ்லிம்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால், படையினர் தமிழர்கள் மீது மட்டுமே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

முன்னைய ஆட்சியின்போது அமைச்சர் அஷ்ரப் கிழக்கு மாகாண அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு எதை எதையோ செய்தார். ஆனால், அவர் தமிழ்ப் பிரதேசங்களுக்கு எதையுமே செய்யவில்லை. தமிழ்ப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் என எல்லா வகையிலும் நாம் புறக்கணிக்கப்பட்டோம். அமைச்சர் அஷ்ரப் ஒரு தமிழருக்குத்தானும் தொழில் வழங்கவில்லை.

அதே போன்று வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு என்று பலகோடி ரூபா வழங்கப்பட்டது. ஆனால், அங்கு எதுவுமே செய்யப்படவில்லை. இப்பணதிற்கு என்னாயிற்று என்றும் தெரியவில்லை.

இது மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாவருடம் வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதிகூட எமக்கு மறுக்கப்பட்டது.

அதே போன்று இந்த அரசு வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக பலகோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஆனால், அங்கு எதுவிதமான அபிவிருத்தயும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் வேதனைக்குரியது.

என்றாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டார். இதனால் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். தரைவழிப் பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. வடக்கும் தெற்கும் இணைக்கப்பட்டுள்ளது. முன்பு யாழ்ப்பாணம் செல்ல ஏழு நாள்கள் பிரயாணம் செய்யவேண்டும் பற்பல இடையூறுகளும் தடைகளும்.

ஆனால், இன்று ஏழு மணிநேரத்தில் கொழும்புக்கு வந்துவிடமுடிகிறது. மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாக விடுதலைப்புலிகளே இருக்கின்றனர். அதனால்தான் நாங்களும் புலிகளின் தலைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டுள்ளோம்.

ஆனால், இந்தச் சபையில் கட்சிகளின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டு சிலர் தினசரி இனவாதம் பேசுகின்றனர். இன்று காலைகூட ஜே.வி.பி. செயலாளர் கவனயீர்ப்பு அறிக்கை என்று பச்சை இனவாதம் பேசினார். அதனால் ஏற்பட்ட அமர்களமும் புரியும். எனவே, மீண்டும் இனவாதம் பேசி இந்த நாட்டை பிளவுபடுததி இரத்தக் களரியை ஏற்படுத்த வேண்டாம் என்று ஜே.வி.பியினரை கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டு மக்களுக்குத் தேவை சமாதானம், அமைதி. அதை ஏற்படுத்த பிரதமர் ரணில் நல்ல பலதிட்டங்களை வகுத்துள்ளார். இதனால் நாடு இரண்டுபடுவதைத் தடுக்கமுடியும்.

இந்தச்சபையில் 225 உறுப்பினர்கள் இருக்கின்றோம். நாம் அனைவரும ஒரே குரலில் அதனை ஆதரிப்போம். ஒற்றை ஆட்சிக்குமுன் மாநில சுயாட்சி ஒன்றை வழங்குவோம். நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிம்மதியையும் ஏற்படுத்துவோம். எமக்கு ஆதரவு தாருங்கள் என்று கோரிக்கை விடுத்தார் அமைச்சர் மகேஸ்வரன். (ஐ)




# நாட்டில் மூன்றாவது கிளர்ச்சிக்கு சதித் திட்டம் தீட்டப்படுகின்றது!

## தயவு, தாட்சண்யமின்றி நடவடிக்கை என்று சூளுரைக்கின்றார் அமைச்சர் அமரதுங்க

நாட்டில் மூன்றாவது கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. அதனைத் தயவு, தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்து முறியடிப்போம். கடந்த காலங்களைப் போன்று முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவோம்.

- இப்படிச் சூளுரைத்தார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

நேற்றுமுன்தினம் மாலை சபை ஒத்திவைப்பு வேளையில் ஐ.தே. முன்னணி உறுப்பினர் ஹேமகுமார நாணயக்காரவின் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் ஜோன் அமரதுஙக இப்படிக் குறிப்பிட்டார்.

### ஹேமகுமார

பிரேரணையை முன்மொழிந்து ஹேமகுமார எம்.பி.பேசினார்.

ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழக மாணவரின் படுகொலையுடன் ஓர் அரசியல் கட்சிக்கு நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

இந்த மாணவரின் படுகொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள். ஒரு சந்தேகநபர் ஓர் அரசியல் கட்சியின் தீவிர உறுப்பினர்களுள் ஒருவர் என்பதும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுள் ஒருவர் இரத்தக் கறைபடிந்த உடைகளுடன் இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று உடைகளை மாற்றிக் கொண்டு, கை, கால் கழுவிக்கொண்டே தனது விடுதிக்குத் திரும்பியுள்ளாார்.

நாம் நாட்டில் அமைதியை ஏற்படுத்தப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் போது, அமைதியை விரும்பாத சில தீய சக்திகள் இங்கு இரத்தக் களரியை ஏற்படுத்த முனைகின்றன.

தாக்கப்பட்ட மாணவர்கள் சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்படும் போது வாசல் பகுதியில் நின்றவர்கள் மீண்டும் அவர்களை இழுத்துத் தாக்கியுள்ளனர். காயப்பட்டவர்கள் வேதனையால் துடிக்கும்போது 'கொலை செய்து விட்டோம்!' என்று கைகொட்டிச் சிரித்துள்ளனர்.

மரணமான மாணவனின் பெற்றோர் கண்ணீருடன் ஒருபிடி சோற்றைக்கூட சாப்பிட முடியாமல் பித்துப் பிடித்தவர்கள் போல் காணப்படுகின்றனர்.

இதேபோன்றுதான் கடந்த காலத்தில் தயாபத்திரண என்ற மாணவரையும் படுகொலை செய்தனர். அப்படியே ஜனாதிபதியின் கணவர் விஜே குமாரதுங்கவும் படுகொலை செய்யப்பட்டார்.

இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயலில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் இனங்காணப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என ஹேமகுமார நாணயக்கார எம்.பி. தமது பிரேரணையின் போது குறிப்பிட்டார்.

### பொ.ஐ.மு. உறுப்பினர் சந்தன

இப் பிரேரணை மீது பொதுமக்கள ஐக்கிய முன்னணி உறுப்பினரான சந்தன கத்திரி ஆராச்சி, ஜே.வி.பி. உறுப்பினரான அனுர திஸநாயக்க ஆகியோரும் பேசினர்.

பொ.ஐ.முன்னணி உறுப்பினர் சந்தன கத்திரி ஆராச்சி பேசும்போது - ஹேமகுமார நாணயக்கார எம்பியின் கூற்றுக்களை ஆதரித்து குற்றவாளிகள யாராக இருந்தாலும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினராகவோ அல்லது ஜே.வி.பி. ஆதரவாளராகவோ இருந்தாலும்கூட இப்படி மிலேச்சத்தனமான செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொலை செய்யப்பட்ட விதானகே சமந்தவை எனக்கு தனிப்பட்ட ரீதியாகத் தெரியும் அவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை கேள்வியுற்றதும் நான் அங்கு சென்றேன். நிலைமை மோசமாக இருப்பதாகவும் அவரது உயிருக்கு ஆபத்து உள்ளதாகவும் வைத்தியர்கள் கூறினார்கள். ஜனாதிபதி நிதியத்தின் மூலம் உதவி பெற்று அவரை வெளிநாடு அனுப்பியேனும் சிகிச்சை அளிப்பது என நாம் முடிவு செய்தோம். ஆனால், அது பயனற்றுப் போய்விட்டது - என்றும் கத்திரி ஆராச்சி எம்பி. உணர்ச்சிபூர்வமாகக் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. உறுப்பினரான அனுர திஸாநாயக்க, இந்தப் படுகொலைகளுடன் தங்கள் அமைப்புக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்றும், அரசு இது தொடர்பாக எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தாங்கள் ஆதரவு வழங்குவதாகவும் கூறினார்.

### உள்துறை அமைச்சர்

விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியதாவது:-

இதுவரை பொலீஸாரும் குற்றப் புலனாய்வுத் துறையினரும் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் ஜே.வி.பியுடன் தொடர்புடைய அனைத்துப் பல்கலைக்கழக சுதந்திர மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இவற்றையெல்லாம் பரிசீலனை செய்யுமபோது நாட்டின் மூன்றாவது கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

நாட்டில் மீண்டும் இரத்தக் களரி ஏற்பட அனுமதிக்கமாட்டோம். தேசத்தின் தேசிய உடைமைகளை சூறையாடுபவர் எவராக இருந்தாலும் விட்டு வைக்கமாட்டோம்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பியினரும் இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளுக்கு ஆதரவு தருவதாகக் கூறினர். அவர்களுக்கு நன்றி. எனவே, இக் கொலையுடன் தொடர்புடைய மேலும் பத்துப் பேர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களை இனங்கண்டு காட்டிக் கொடுத்து உங்களுடைய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றும் அமைச்சர் ஜோன் அமரதுங்க வேண்டுகோள் விடுத்தார். (ஐ)

# ஒரே கடவுளுக்கு அநேக பெயர்கள்



உண்மையில் சொல்வதானால் ஒரே ஒரு கடவுள் தான் இருக்கிறார். ஒரே கடவுளுக்கு அநேக பெயர்கள். ஒரே தாய்க்கு நானகு மகன்கள். முதல் மகன் சிவப்புக் கலர் (சிவப்பு நிறத்தில்) பழரசம் தரும்படி கேட்கிறான். இரண்டாவது மகன் பச்சைக் கலரில் கேட்கிறான். மூன்றாவது மகன் கறுப்பு நிறத்திலும், நான்காவது மகன் வெள்ளை நிறத்திலும், பழரசம் கேட்கின்றனர். அப்போது தாய் என்ன செய்வாள்? அவள் புத்திசாலியான தாயானதால் ஒரே பழரசத்தை சிவப்பு, பச்சை, கறுப்பு வெள்ளைநிற (கண்ணாடி) கிளாசில் நிரப்புகிறாள். இதன்மூலம் அவளது பிள்ளைகளைத் திருப்திப்படுத்துகிறாள். நமது உடல்கள் எல்லாம் அந்தக் கண்ணாடி (கிளாஸ்) போல. உடலின் நிற வேற்றுமைகளைப் பிரதானமாக நினைக்கக்கூடாது. அத னுள் இருக்கும் ஆத்மாவின் ஏகத்துவத்தை (ஒருமைப்பாட்டை) உணரவேண்டும். கிளாசுகளும் நிறங்களும் வெவ்வேறானவையாக இருக்கலாம். ஆனால், அவற்றுள் இருக்கும் இனிமையான ரசம் (ஆத்மா) ஒன்றே. உடல் ஒரு நாள் எப்படியும் அழியும் என்பது நிச்சயம். நீங்கள் தேகத்தின் மேல் பற்றுவைத்தீர்களானால், நீங்கள் துன்பத்தை எதிர்கொள்ளவேண்டிவரும். நீங்கள் உருவத்தையும், பெயரையும் கடக்கவேண்டும். தெய்வீகம் எல்லா வடிவங்களிலும் ஊடுருவி நிற்கிறது. புனித பைபிளிலும், திருக்குர்ஆனிலும் எத்தனையோ புனித போதனைகள் நிறைந்திருக்கின்றன. ஆனால், புத்தியில்லாத மக்கள் அப்போதனைகளைப் புரிந்துகொள்ளாமல் தவறான வழியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். முஸ்லிம்கள் அல்லா என அறியப்பட்டவரும், ஜெஹோவா - என கிறிஸ்தவர்களால் உணரப்பட்டவரும், செந்தாமரைக் கண்ணன் - என விஷ்ணுவை ஆராதிப்பவர்களால் புரிந்துகொள்ளப்பட்டவரும், சிவனை வழிபடுபவர்களால் சம்பு எனப் போற்றப்படுபவருமாகிய கடவுளை எவ்வாறெல்லாம் நீங்கள் வழிபட்டாலும், அதற்கெல்லாம் மகிழ்ச்சியுடன் பதிலளிப்பார். கடவுளுக்கென்று பல்வேறு உருவங்களையும், பெயர்களையும் கற்பித்துக்கொள்கிறாய். இவை அனைத்தும் உனது திருப்திக்காகவே! ஆனால், கடவுள் எப்போதும் ஒருவர்தான். எந்த ஒரு மதமும், ஹிம்சையையும், கொடூரச் செயல்களையும், பிறருக்குத் தீங்கு செய்வதையும் போதிக்கவில்லை. சில தீயமனம் படைத்தவர் கள் புனித போதனைகளைத் தவறாகத் திருத்தி மற்றவர்களையும் குழப்புகிறார்கள். (அர்த்தம் கொள் கிறார்கள்) அதனை மனதில் கொண்டு கொடூரச் செயல்களில் எல்லாம் ஈடுபடவும் செய்கிறார்கள். மேன்மையான மக்கள் புனிதமான விஷயங்களைத் தான் கற்றுத்தந்திருக்கிறார்கள். கடவுள் முழுமையான அன்பின் வடிவம் மனிதனும் அவ்வாறே எனப் புரிந்துகொள்ளுங்கள்.

முதலில் மதம் என்பதைப் பற்றிப் புரிந்துகொள்ளுங்கள். மதம் என்பது உண்மையை உணர்ந்துகொள்வது. உன்னைப்பற்றிய உண்மையை நீ உணர்ந்து கொண்டால்தான், உன்னால் மதம் என்பது என்ன என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதுதான் ஆன்மீகம். மதம், ஆன்மீகம், எஜுகெயர் "Educare" ஆகியவற்றுக்கிடையே எவ்விதமான வேற்றுமையும் கிடையாது.

### சாயி சிந்தனை

இங்கே ஒரு மோதிரம், சங்கிலி, தோடு இருக்கின்றன. இவை தங்கத்தின் வெவ்வேறு வடிவங்கள். இத்தனையும் அனைத்தையும் இணைக்கும் சத்தியத்தை ஒருவன் புரிந்துகொண்டான் என்றால் வேறுபாடுகளுக்கு இடமேது?

ஆகையால், பற்பல வடிவங்களில் உங்களுக்குத் தென்பட்டாலும் கட வுள் ஒன்றே! அனைத்துக்கும் ஆதாரமான தத்துவம் அன்புதான். இதைத் தான் நீங்கள் விரும்பவேண்டும். மதத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஒரே ஒரு மதம்தான் இருக்கிறது. அதுதான் அன்பு மதம். எஜுகெயர் "Educare" என்பது மனிதனுள் உறையும் தெய்வீக அன்பை வெளிக் கொணர்வது. அதனால்தான் 'Love is God. Live in Love' எனக் கூறுகின்றனர். இவ்வாறு இருந்தால் இவ்வுலகில் சச்சரவுகளே இருக்காது. அனைவரும் ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக வாழ்வார்கள். கருத்து வேறுபாடுகள்தான் சச்சரவுகளுக்குக் காரணமாகின்றன. இத்தகைய வேற்றுமைகளைத் தூரத்தள்ளி விட்டு ஒற்றுமை உணர்வுடன் வாழுங்கள்.

*இருப்பதோ ஒரே ஒரு மொழி அது இதயமொழி*
*இருப்பது ஒரே மதம் அது அன்பு மதம்*
*இருப்பது ஒரே ஒரு ஜாதி அது மனித ஜாதி*

(சனாதன சாரதி 2002 தை)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள News Mat Yamaha -50, Honda Charly மோட்டார் சைக்கிள்கள், பெண்களுக கான புதிய லுமாலா துவிச்சக்கர வண்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வா, 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P 2429, 3252. (10496)

## ஓட்டோ விற்பனைக்கு

ஒருவரின் பாவனையிலிருந்த 202ஐ தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.15, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி (நீராவியடி), யாழ்ப்பாணம். (10550)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima லேட்டுக் குஞ்சுகள் இன்று வியாழன் மாலை பெற்றுக்கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10544)

## தொடர்புகொள்ளவும்

எம்முடன் வசித்த ராஜேஷ் என்பவர் தயவுசெய்து திரு.மாசிலாமணியுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். 'நித்தில்லம்' வன்னிய சிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். (10594)

## தவறிவிட்டது

பண்ட்றோட், கண்ணகிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரபாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.740484249V), சிறிய போஸ்ட்டன் 03-11-2002 அன்று யாழ்நகரிற்கும் ஓட்டுமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கபிலா பாட்டா கடையில் ஒப்படைத்துதவவும். (10580)

கந்தையா மகேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.622562987V), சாரதி அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை என்பன முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10586)

ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்கு, சாளி கோயிலடியைச் சேர்ந்த செ.தர்மலிங்கம் என்பவருடைய தே.அ.அ.(இல.301562152V), வயோதிப அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (10954)

## கடை தேவை

யாழ்நகர் ஸ்ரான்லி வீதியில் ஒருகடை தேவை. வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ இருப்பின் தொடர்புகொள்ளவும். கேதீஸ். T.P. 222 2901. (10548)

## தேவை

கொழும்பில் வேலை செய்யும் யாழ்.Doctor வீட்டில் தங்கியிருந்து சிறுபிள்ளை ஒருவரை பார்த்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கக் கூடிய தகுந்தபெண் (வயது 45-55) ஒருவர் தேவை. கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும். சபா. தியாகராசா, 271/1, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, T.P. 360257

(சி-24843)

## திருமண சேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 Doctor (MBBS), 1070 Doctor (MBBS), (1972 எஞ்சினியர், 1967 Bank, 1971 ஆங்கில மாஸ்டர் (பட்டதாரி), 1969 மாஸ்ரர் இவர்களுக்கு அழகிய மணப் பெண்கள் தேவை. கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (10589)

## இளம்பெண் மர்ம மரணம்

நாவற்குழி,நவ.14

இரவு உணவு உண்டபின் உறங்கச் சென்ற பெண் மறுநாள் காலை அயலில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கடந்த எட்டாம் திகதி கைதடி நாவற்குழி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

கைதடி நாவற்குழி தெற்கைச் சேர்ந்த திருமதி உருத்திரன் செந்தில்பாமா (வயது 30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இம்மரணம் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் சடலத்தை எரிக்காது புதைக்கும்படி உத்தரவிட்டார்.

மேற்படி இப்பெண் திருமணமாகி மூன்று மாதங்களே சென்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-75)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25 - 05 - 1929

ஆண்டவன் அடியில் 26 - 10 - 2001

## அமரர் கந்தையா நடராசா

*(ஓய்வுபெற்ற புகையிரத சேவை ஊழியர்)*

திதி: பூர்வபக்க தசமி 14.11.2002

ஆலம் விழுதுகள் போல் உறவுகள் இருந்தாலும்
ஆறுதல் சொல்வதற்கு நீங்கள் இன்றித் தவிக்கின்றோம்
காலனவன் உமைக் கவர்ந்து ஓராண்டு ஆனாலும்
காயவில்லை எங்கள் நெஞ்சத்தின் காயமது!

ஐயா! உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மயிலணி வடலி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் இருக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*286/A, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.* (10597)

# தாழாத்துயர் சுமக்கும் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நயினை மண்ணில் 1957 - 06 - 12

முருகன் திருவடியில் 2000 - 11 - 06

மனைத்தக்க மாண்புடையாள்

## நயினை திருமதி யோகேஸ்வரி குலாஆனந்தன்

(இராசாத்தி)

திதி: 14.11.2002

ஐப்பசி விக்கிரம ஆம்பூர்வம் ஆர் தசமி
செப்பு குலாநந்தன் தேர்யோகேஸ் - இப்புவியின்
பாசமெல்லாம் தான் துறந்து பற்றி முருகனுர
நேசமுடன் சென்றான் நிறைந்து.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

*30/4, சிவிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (10599)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சண்முகம்

சரவணை மேற்கைச் சேர்ந்த கந்தையா சண்முகம் அவர்கள் நேற்று (13.11.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம், சறோஜா, சுலோசனா (யாழ்.ப.நோ.கூ.சங்கம், கிளை 12A முகாமையாளர்), வசந்தகுமார் (ராணி அரிசி ஆலை, வவுனியா), ரஜனி, சுதாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் இரகுநாதன், ஜெயராஜசிங்கம், விசாகரெத்தினம், ரஞ்சன், முத்துலெட்சுமி (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவதர்சன், தனுஜன், சாணுகா, சயந்தன், ஜதுசன், சேது பவான், ஐஸ்வரியா, டுசிகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சரவணை மேற்கு, 8ஆம் கட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.வசந்தகுமார் (மகன்)

*சரவணை மேற்கு, வேலணை.* (10592)

## திருமதி ஜெயமணி நடராஜா

இல.46, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஜெயமணி நடராஜா அவர்கள் 12.11.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் M.G.நடராஜா (ஆங்கில பகுதி விரிவுரையாளர், யா/தொழில்நுட்பக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் பொன்மலர் கிறிஸ்ரோலோகஸ் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஜோதினி, திருமதி சகிலா (யாழ்.பல்கலைக்கழகம், நிதிப்பிரிவு), திருமதி றஞ்சிக்கா (கனடா), திருமதி ஜக்குலின் (யாழ். மாவட்ட செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதாசன், சந்திரகுமார் (கனடா), ரொணி ஆகியோரின் மாமியாரும் சுஜிந்தா, சுஜிரோன், சிபானி லோஷானா, மெல்ரினா, ஷோன், செலுமியேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.11.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **T.சுதாசன்** (மருமகன்).

*46, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.* (10596)

## திருமதி சிவராசா பரமேஸ்வரி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா பரமேஸ்வரி 13-11-2002 புதன்கிழமை (தேவி பாகவதம்) இறைபதமடைந்தார்.

அன்னார் வைரவநாதன் மாரிமுத்து, மனைவி இராசம்மாவின் பாசமிகு புதல்வியும் சின்னத்தம்பி சிவராசா அவர்களின் அன்பு மனைவியும் குலசிங்கம் காலஞ்சென்ற கனகேஸ்வரி, சபாரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கந்தசாமி அப்புலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் தேவிபாகவதச் சடங்குகள் அன்னாரின் வாசஸ்தலத்தில் இன்று (14-11-2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **சி.சிவராசா** (கணவர்).

*ஏழாலை மேற்கு, ஏழாலை.* (10959)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 422 |
| திகதி | 12.11.2002 |
| டிக்கட்டின் நிறம் | நீலம் |
| செல்லுபடியாகும் தொடர் இல. | 4568692-4581580 |

வெற்றி இலக்கங்கள்: 35 36 38 42

லக்கினம்: இடபம்



ஜக்பொட் பரிசு ரூபா. 3,554,100/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 4,182,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 281,097 | 10 | 2,810,970 |
| 2 இலக்கங்கள் | 25,814 | 20 | 516,280 |
| 1 இல + லக்கினம் | 25,605 | 30 | 768,150 |
| 2 இல + லக்கினம் | 2,337 | 100 | 233,700 |
| 3 இலக்கங்கள் | 680 | 500 | 340,000 |
| 3 இல + லக்கினம் | 58 | 5,000 | 290,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,554,100 | - |
| மொத்தம் | 335,594 | - | 5,259,100 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,259,100/-

தொடர் இல. 5565076க்கு மேற்பட்ட சிகப்பு நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 15ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4579934-3-09
4577906-0-30
4571660-9-43
4574849-8-31
4569010-9-88

அபிவிருத்தி லொத்தர் வெற்றி
லக்ஷ்மீகரத்தை நிறைவேற்றும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# கூடாத கூட்டத்தால் குழம்பிப்போய் உதவியோரை உதறும் ஜனாதிபதி

**ஐ.தே.முன்னணியுடன் இணைந்து தேசிய அரசு அமைக்க வேண்டும் எனக் கூறியோர் மீது நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி சந்திரிகா, இன்று தேசிய அரசு அமைப்பது பற்றி கருத்துத் தெரிவித்துள்ளது புதுமையாகும். கூடாத கூட்டத்தால் ஜனாதிபதி குழம்புகிறார் என்கிறார் கட்டுரையாளர் உப்புல் யோசெப் பெர்னாண்டோ. "லங்காதீப" நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தேசிய அரசொன்றினை உருவாக்குவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் தொடர்பு கொள்ள முயல்வோர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் எனக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இன்று ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசொன்றினை அமைப்பது தொடர்பாக சாதகமான கருத்துத் தெரிவிப்பது புதுமையாகும். தேசிய அரசு அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் றிச்சர்ட் பத்திரன ஆகியோர் தொடர்பு வைத்துக்கொண்டனரெனக் குற்றம் சுமத்திய ஜனாதிபதி, இன்று அதே ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசு உருவாக்குவது தொடர்பாக சாதகமான கருத்தை வெளிப்படுத்தி வருவது அதைவிடப் புதுமையானது. புதுமை எனக் கூறுவதைவிட நகைப்புக்கு இடமானது எனக் கூறக்கூடியது.

அவர் கேலிபேசுகிறாரா? அல்லது இக்கருத்து வெளிப்பாட்டின்மூலம் மற்றையோரின் கேலிக்குள்ளாகிறாரா? என்பதே இப்போதுள்ள கேள்வியாகும். வாழ்க்கையில் எல்லாவற்றையும் நகைச்சுவையாக எடுத்துக்கொள்பவராக இருந்தபோதிலும், அரசியல் வாழ்க்கையில் எதனையும் நகைச்சுவையாக எடுக்காத நபர் சந்திரிகா என்பது சந்திரிகாவைப் புரிந்துகொண்டவர்களுக்குத் தெரியும்.

வெளிப்படையான அரச நிர்வாக நடவடிக்கைகளின் போதும், இரகசிய முடிவுகள் மேற்கொள்ளும் தருணத்திலும், மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு, தனது நிலைப்பாட்டினின்றும் விட்டுவிலகாது, மற்றவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டினை மாறச்செய்து அல்லது கிறுங்கச்செய்து தனது நிலைப்பாட்டை ஏற்கச் செய்யக்கூடிய திறன் கொண்ட அரசியல்வாதியாக சந்திரிகா காணப்பட்டார். 1977இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அரசியலில் காலடி வைத்த சந்திரிகா, அப்போதிலிருந்து, அச்சமயம் பதவியிலிருந்த ஐ.தே. கட்சி அரசுடன் இணைந்து தேசிய அரசொன்றினை உருவாக்கும் நோக்கம் கொண்டிருந்த தனது சகோதரரான அனுரா பண்டாரநாயக்காவின் நிலைப்பாட்டினை எதிர்த்ததோடு, தனது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அவ்வேளையில், தலைவியாகச் செயற்பட்ட தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அதேவிதமான கொள்கையைக் கொண்டிருந்தமையால் அவரைவிட்டு விலகிச் சென்று அரசியல் நிர்வாகம் என்ற நீண்ட வீதியில் பயணத்தை ஆரம்பித்தார்.

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

அதைத் தொடர்ந்து தனது கணவரான விஜயகுமாரணதுங்கவுடன் இணைந்து மக்கள் கட்சியை உருவாக்கியதோடு, கிராமப்புறச் சாதாரண பொதுமக்களைக் கவர்ந்து இழுத்ததன்மூலம் மக்கள் கட்சியின் செல்வாக்கை நாடு பூராவும் விஸ்தரித்தார்.

அவரது கணவர் கொலையுண்டதையடுத்து அவரது மக்கள் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பிடிக்குள் அகப்பட நேர்ந்ததைத் தொடர்ந்து கட்சியையும், தலைமைத்துவத்தையும் கைகழுவிவிட்டு வெளிநாட்டில் சென்று அவர் வாழ நேர்ந்தது. வெளிநாட்டிலிருந்து மீண்டுவந்து மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்கான வழியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டார். அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்துகொண்டது அக்கட்சியைத் தான் எண்ணும் வகையில் மாற்றியமைக்கும் நோக்கத்தில் அல்ல. அவ்வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் வெறுத்தொதுக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகளுடன் இணக்கம் காணுதல் மற்றும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல் என்ற இவ்விரண்டு நோக்கங்களை அடைவதன்மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செல்வாக்கை உயர்த்தும் நோக்கிலேயே அவர் ஸ்ரீ.ல.சு. கட்சியில் இணைந்து கொண்டார். அந்தவகையில், தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதிலும் அவர் வெற்றியடைந்தார்.

அவரது நோக்கங்கள் பலனளித்தது மட்டுமன்றி, 17 ஆண்டு காலமாக அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாதநிலையில், சரித்திரத்தின் குப்பைக்கூடைக்குள் வீசப்படும் நிலையில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 62 சதவீதப் பொதுமக்களின் ஆதரவு பெற்று மீண்டும் பதவிக்கு வரமுடிந்தமைக்கு சந்திரிகாவே முக்கிய காரணமானார்.

அப்படியாயின் இன்று சந்திரிகாவுக்கு என்ன ஆகிவிட்டது என ஆராய்ந்து பார்ப்போமானால், சில நாள்களின் முன்னர் பொதுஜன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின கூட்டத்தில் அவர் தெரிவித்த கருத்துக்களை நாம் மனதிற்கொள்ள வேண்டும். 2001 இல் நாடாளுமன்றத்தைக் கலைதது விட்டுப் பொதுத் தேர்தலுக்கான உத்தரவைத் தான் பிறப்பித்தமையே தான் செய்த பெரும் தவறு எனவும், தன்னைச் சூழ இருந்த நாலைந்து நபர்களின் ஆலோசனைகளைக் கேட்டே தாம் அத்தகைய தவறான முடிவை மேற்கொண்டதாகவும் அக்கூட்டத்தில் அவர் குறிப்பிட்டார். இக்கூற்று உண்மையானதாயின், அன்று மட்டுமல்ல, இன்றும் அவரைச் சூழ இருக்கின்ற நபர்கள் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிகமுக்கியமானதொன்றாகும்.

அன்றுபோல் இன்றும் சந்திரிகாவுக்கு மிகநெருக்கமாக இருப்பவர் மங்களசமரவீர. அதாவது சந்திரிகாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கொண்டுவந்து, அதன் தலைவியாக ஆக்குவதற்கு வழிசமைத்துக்கொடுத்தன்மூலம் கட்சியை வெற்றிபெற வைத்தவர் மங்களசமரவீர ஆவார். அவர் சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்குபவர்களுக்கு ஒருபடி மேலாக சந்திரிகா கூறுவதை, சந்திரிகாவின் அவசியமான தேவைகளைப் பூரணமாக நிறைவேற்றி, அவரைப் பாதுகாக்க முயலும் நபராவார். சந்திரிகா பிரிட்டனில் இருந்து நாடு திரும்பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன தொடர்பு வைத்துக்கொள்ள ஆரம்பித்த நாள்முதல் சந்திரிகாவுடன் அச்சிரமமான பயணத்தை ஆரம்பித்த மங்களசமரவீர இன்றும் அவருடன் மிகநெருக்கமாக இருந்துவரும் ஒரேயொரு நபராவார்.

இன்று சந்திரிகாவுக்கு மிக நெருக்கமான மற்றொரு ஆலோசகராக இருப்பவர், 1980இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டதால் காலியான அத்தனகல்ல தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குச் சந்திரிகாவின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியின்றும் விலகிச்சென்று, மீண்டும் கட்சிக்குத் திரும்பி வந்தவரும், சந்திரிகாவும் அவரது கணவரும் கட்சியை விட்டு வெளியேறி, விஜயகுமாரணதுங்கவின் மரணத்தின் பின்னர், சந்திரிகா மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணைந்துகொண்ட தருணத்தில் மீண்டுமொரு தடவை கட்சியை விட்டு வெளியேறிச் சென்ற சந்திரிகாவின் சகோதரரான அனுரா பண்டாரநாயக்க ஆவார்.

சந்திரிகாவின் மற்றொரு ஆலோசகராக இன்று இருப்பவர், சந்திரிகாவும் அவரது கணவரும் இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து 1980இல் பெரிய அளவிலான வேலை நிறுத்தத்தை வழிநடத்திய வேளையில், அவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையால் தமது பதவிகளை இழந்த தொழிலாளர்களுக்கு எதிராக அரச தரப்பிற்காக நீதிமன்றத்தில் ஆஜரானவரும், 1959இல் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா கொலையுண்ட சமயம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பண்டாரநாயக்கா நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்துவதற்காக ஓர் இலங்கையர் என்ற வகையில் அழைப்பு விடுக்கப்பட்டபோது, பண்டாரநாயக்கா ஓர் இனவாதியெனக் காரணங்காட்டி அந்த அழைப்பை ஏற்க மறுத்தவருமான லக்ஸ்மன் கதிர்காமர் ஆவார்.



ஜனாதிபதி சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி அரசின் ஊடகத்துறை ஆலோசகராகக் கடமையாற்றிய பேராசிரியர் சரத் அமுனுகம, ஜனாதிபதி சந்திரிகாவின் இன்றைய இன்னொரு நெருங்கிய நபராவார்.

1977ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் தகவல் அமைச்சின் உயர் அதிகாரமிக்க பதவியை வகித்த சரத் அமுனுகம அரச ஊடகங்கள்மூலம் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராக பெரிய அளவிலான பிரசாரம் மேற்கொண்டவராவார். பின்னர் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் சரத் அமுனுகம ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக இருந்து, அவ்வேளையில் தென்மாகாண முதலமைச்சராகவிருந்த சந்திரிகாவுக்கெதிராக ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஊடாக பெரும் அளவிலான பிரசாரம் மேற்கொண்டவர்.

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டிலிருந்து திரும்பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்ட வேளையில் அவர் தமிழீழ ஆதரவாளரெனக் குற்றம் சுமத்தி, அவரது தலைமைத்துவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததன்மூலம் 1994 பொதுத் தேர்தலில் சந்திரிகாவைத் தோல்வியடைச் செய்ய முழுமூச்சில் ஈடுபட்ட மக்கள் ஐக்கிய முன்னணியினர் இன்று அவருக்கு ஆதரவாக ஒரு புறத்தில் இருக்கின்றனர்.

அன்று சந்திரிகாவின் கணவரையும் அவரதும் அவரது கணவரினதும் அரசியல் ஆதரவாளர் பலரையும் கொலைசெய்து அவரை நாட்டைவிட்டுச் செல்ல வைத்ததன்மூலம் அவராலும் அவரது கணவராலும் உருவாக்கப்பட்ட கட்சியை நாசம் செய்த ஜே.வி.பியினர் இன்று அவருக்கு ஆதரவாக அவரது மறுபுறத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தேசிய அரசு அமைக்கவேண்டுமெனக் கோருவோர் தண்டிக்கப்பட வேண்டுமெனச் சந்திரிகா கூறிய வேளையில், இந்தக் கூட்டத்தினரே அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர். இன்று தேசிய அரசொன்றை ஏற்படுத்துவது சம்பந்தமாக சந்திரிகா கருத்துத் தெரிவிக்கும்போது, அதே கூட்டத்தினர்தான் அவரைச் சூழ்ந்து அமர்ந்துள்ளனர்.

2001ஜூன் மாதமளவில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகிச் செல்லத் தயாரான வேளையில், அந்த நேரத்தில் நாடு எதிர்நோக்கியிருந்த பொருளாதார மற்றும் யுத்த அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு முகங்கொடுத்து நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கட்சியையும், அரசையும் காப்பாற்றிக் கொள்ள ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கி ஒரு தேசிய அரசை உருவாக்கும் யோசனையை எஸ்.பீ.திஸநாயக்க, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் மகிந்த விஜேசேகர ஆகியோர் சந்திரிகாவிடம் தெரிவித்திருந்தனர். அவர்களது யோசனையை ஏற்று அந்தவேளையில் தேசிய அரசொன்றை உருவாக்கியிருப்பின் இன்றும் பொ.ஐ. முன்னணி அரசே பதவி வகித்திருந்திருக்கும். அப்படியாயின், இன்றும் நாட்டினதும் அரசினதும் தலைவியாக சந்திரிகாவே இருந்திருப்பார். ரணிலுக்குப் பிரதமர் பதவியளித்து தேசிய அரசு அமைக்கப்பட்டிருப்பினும், சமாதானம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளில் சந்திரிகாவுக்கே தலைமைத்துவம் கிடைத்திருக்கும். அவ்வாறு ரணில் பிரதமராக்கப்பட்டிருப்பின் அந்நியமனம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டதேயன்றி, பொதுமக்களின் ஆதரவினால் வழங்கப்பட்டதல்ல என்ற அடிப்படையில் ரணிலினால் எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கமுடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கும். அன்று ரணிலை பிரதமராக்கி தேசிய அரசு அமைக்கப்பட்டிருக்குமானால் ரணில் தேசிய அரசில் சம்பந்தப்படுவதன் காரணமாக அதற்கு எதிராக அதிருப்தி அடைவோர் அடங்கிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் குரலெழுப்பினாலும், பொ.ஐ.முன்னணியோ அன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ சந்திரிகாவின் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பமாட்டா.

ஆனால், அன்று எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல்.பீரிஸ், மஹிந்த மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகிய இவர்களில் எவரது ஆலோசனையையும் சந்திரிகா கணக்கில் எடுக்கவில்லை. அவர்கள் தனக்கெதிராகச் சதி செய்வதாகக் கூறி அவர்களை ஒதுக்கிவிட்டு நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவதற்கான அடித்தளமிட்டு, பின்னர் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்ததன் மூலம் அரசைக் காப்பாற்றிக்கொள்ள இயலாத நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு ஆலோசனை கூறியவர்கள் இன்று சந்திரிகாவைச் சுற்றி அமர்ந்திருக்கும் இந்தக் குழுவினரே துரதிர்ஷ்டவசமாக, அந்தவேளையில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தினம் தனக்கு பெரும்பான்மை பலம் கிடையாது எனத் தெரிந்து கொண்ட வேளையில் சந்திரிகாவுக்கு ரணிலை பிரதமராக்கி தேசிய அரசொன்றை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. அவர் அப்போதுகூட அதனைச் செய்யவில்லை. தன்னைச் சுற்றியிருந்த நபர்களது ஆலோசனைக்கமைய நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அன்று அப்படிச் செய்யாதிருந்தால் இன்றும் ரணிலுக்கு மக்களது ஆதரவு கிடைத்திருக்காது. அத்தோடு, சந்திரிகாவுக்கும் அவரது கட்சிக்கும் தோல்வி ஏற்பட்டிருக்காது. மக்களின் ஆதரவின்றி ரணிலுக்கு பலம்மிக்க அரசு அமைக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்காது. அப்படி ஏற்பட்டால்கூட ரணிலின் அரசு பலவீனம் அடையும் சந்தர்ப்பத்தில் ஆட்சி அதிகாரத்தை இலேசாகத் தனது கைகளில் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையும் வாய்த்திருந்தது. அத்துடன் அவரும் அவரது கட்சியும் பொதுத் தேர்தலில் தோல்வியுறவும், ரணிலுக்கு ஆட்சியமைக்க பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவும் நேர்ந்திருக்காது.

இதன்பின்னர் 2001இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகாவின் அரசு தோல்வியைத் தழுவிய சமயத்தில் தேசிய அரசொன்றினை அமைக்க ரணிலை ஒப்புக்கொள்ளச் செய்யும் வாய்ப்பு இருந்தது. சந்திரிகா அப்போதும் அதனைச் செய்யவில்லை. அந்த வேளையில் தேசிய அரசொன்றினை உருவாக்கும் ஆலோசனையைத் தெரிவித்தவர்கள் எச்.எம்.பௌசி, றிச்சர்ட் பத்திரன மற்றும் 2000 ஆண்டு ஜூன் மாதமளவில் தேசிய அரசு அமைக்கும் ஆலோசனையைத் தெரிவித்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோராவர். அந்தச் சமயத்திலாவது அவர்களது ஆலோசனையை ஏற்று, தேசிய அரசொன்றினை உருவாக்கியிருப்பின் இன்று இச்சமாதான முயற்சிகளுக்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பம் சந்திரிகாவுக்கே கிடைத்திருக்கும். அந்தவேளையில், அவர்கள் தேசிய அரசு நிறுவும் யோசனையைத் தெரிவித்தபோது அவர்கள் கட்சியைப் பிளவுபடுத்தி ரணிலுடனான ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயல்வதாக சந்திரிகாவைச் சுற்றியிருந்த கூட்டத்தினர் குற்றஞ்சாட்டினர். சந்திரிகாவும் அவர்களது பேச்சைக் கேட்டு தேசிய அரசு அமைக்க முயல்பவர்களைத் தண்டிக்க வேண்டுமெனக் கூறியதோடு நிற்காமல் அவ்வாறு கூறியவர்களுக்கு எதிராகத் தனது கட்சி மட்டத்திலான விசாரணைக்கு உத்தரவிட்டார்.

தேசிய அரசு அமைக்கவேண்டுமெனத் தினமும் சந்திரிக்காவுக்கு ஆலோசனை கூறியவர்களது நோக்கம் சந்திரிகாவையும் கட்சியையும், அரசையும் இக்கட்டிலிருந்து விடுவிப்பதேயாகும். அவர்கள் அப்படிக் கூறியது சந்திரிகாவையும் கட்சியையும் அரசையும் காப்பாற்றுவதற்கேயாகும். எஸ்பி.திஸநாயக்க சந்திரிகாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கொண்டுவந்து, கட்சியின் தலைவியாக்குவதில் பங்கேற்றவர். சந்திரிகா அவரை கட்சியின் செயலாளராக நியமித்ததும் இதனாலேயாகும். ஜி.எல். பீரிஸ் சந்திரிகாவின் அரசை சர்வதேச மட்டத்திலும் சிறுபான்மையினர் மற்றும் வர்த்தக சமூகத்திரிடையேயும் பிரபல்யம் அடையச் செய்தவர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. 1992 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவராக அனுரா பண்டாரநாயக்கா கருதப்பட்ட வேளையில்

**தமிழில்: வீயெஸ்ரி**

அனுராவின் விரோதத்தையும் பொருட்படுத்தாது கம்பஹா மாவட்டத்தில் அமைந்த தனது தொகுதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் சந்திரிகாவைப் பங்குபற்ற வைத்தவர். அவ்வேளையில் சந்திரிகாவை கம்பஹா மாவட்டத்திலுள்ள எந்தவொரு தேர்தல் தொகுதிக்கும் அழைத்துச் செலலக்கூடாதென கம்பஹா மாவட்டத் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களுக்கு அனுரா பண்டாரநாயக்கா கட்டளையிட்டிருந்தார். ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அவ்வுத்தரவையும் மீறி, கடும் அரசியல் எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுத்தே சந்திரிகாவை அங்கு கொண்டுசென்றார். ஏ.எச்.எம். பௌசி, 1980இல் அனுரா பண்டாரநாயக்கா கட்சியை விட்டு விலகிச் சென்று மீண்டும் கட்சியில் இணைந்து சந்திரிகாவுடனும் விஜயகுமாரணதுங்கவுடனும் சச்சரவில் ஈடுபட்டதன் காரணமாக சந்திரிகா, விஜய ஆகியோருடன் சேர்ந்து தானும் கட்சியை விடடு விலகிச் சென்று, பின்னர் சந்திரிகா வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து கட்சியில் இணைந்தவேளையில் சந்திரிகாவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டவர். வேறொரு வகையில் குறிப்பிடுவதாயின் சந்திரிகாவுக்கு மிகவும் விசுவாசமான மனிதர். ஐக்கிய தேசியக் கட்சியால் குடியுரிமை பறிக்கப்பட்டவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிக்கலகளைச் சந்தித்தவேளையில் கட்சியின் சார்பில் தென்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் றிச்சர்ட் பத்திரன ஆவார். 1988 ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஜே.வி.பியினதும் மிரட்டல்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் அணைப்பில் 28 - 08 - 1990



ஆண்டவன் பிணைப்பில் 15 - 10 - 2002

கொக்குவில் இந்துக் கல்லூரி 7ஆம் ஆண்டு மாணவன்

## செல்வன் இரத்தினேஸ்வரன் கம்சீவன்

*எமது பாசத்தின் உறைவிடமே!*
*நேசத்தின் ஒளி விளக்கே!*
*குடும்பத்தின் குல விளக்கே!*
*கம்சீவா! உன் பிரிவால் எம்மனம்*
*ஆறுதில்லையடா! அமைதியில்லையடா!!*
*உன் நினைவுடன் ஊசாடும் நாம்*
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(10598)

பிரிவால் வாடும்:

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு.*

த.இரத்தினேஸ்வரன் (G.S. தந்தை),
ஜெயராணி (தாய்), சகோதரர்கள்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 10 - 11 - 1942



உதிர்வு 01 - 10 - 2002

## அமரர் வேலுப்பிள்ளை சண்முகநாதன் (மாமா)

திதி: 14.11.2002

அன்பான முகத்தை அரவணைக்கும் இதயத்தை
இனி நாம் காண்பது எப்போது?
*உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல*
*இறைவனை வேண்டி நிற்கின்றோம்.*

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (14.11.2002) வியாழக்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*35, கொண்டலடி வீதி,*
*நல்லூர்.*

(10962) மனைவி, பிள்ளைகள்.

# முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 04 - 01 - 1924



மறைவு 26 - 10 - 2001

## திருமதி நல்லையா மனோன்மணி

*ஓராண்டும் ஆகிறதோ உலகைவிட்டு நீரேகி?*
*உருக்கின்றோம் கண்ணீரை உள்ளந்தான் வருந்தியே*
*அழகான புன்சிரிப்பும் அமைதியான பேச்சும்*
*அம்மா நாம் காண்பதெப்போது அகிலத்திலே?*
*எந்நாளும் உமது முகந்தான் எம்முன்னே தோன்றுதம்மா!*
*எப்படித்தான் வாழ்வோம் நாம் உம்மை பிரிந்திங்கு?*

*றெஜிஸ்ரார் லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

(10958) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## உசன்பகுதிக்கு விரைவில் மின்சாரம்

தென்மராட்சி,நவ.14

உசன் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின் விநியோகத்திற்கென புதிய ஜெனரேற்றர் ஒன்று நேற்றுமுன்தினம மின்சாரசபையினரால் கொண்டுவரப்பட்டு உசன் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு பொருத்தப்பட்டிருந்த ஜெனரேற்றர் யுத்த சூழ்நிலைகளின்போது பழுதடைந்ததால் புதிய ஜெனரேற்றர் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான முன்னோடி இலவச கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் இந்தக் கருத்தரங்கு நடைபெறும். (ம)

## சாவகச்சேரியில் இன்றுமுதல் கட்டாக்காலி நாய் அழிப்பு

தென்மராட்சி,நவ.14

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதையடுத்து, சுகாதாரத்திணைக்களமும், நகரசபையினரும் இணைந்து கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இன்று தொடக்கம் ஒரு வாரத்திற்கு கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் நடைபெறவுள்ளதாகவும் - வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## செயலமர்வு

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி முன்னோடிப்பாடசாலை அதிபர்கள், வாண்மைப் படுத்துநர்களுக்கான இரண்டாம் கட்ட செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தேசிய கல்வி நிறுவக உதவிப்பணிப்பாளர் நாயகம் திருமதி ஜி.எஸ்.கினகே, ஜி.ரி.இசட் நிறுவனத்தைச்சேர்ந்த கலாநிதி சே.சோமசுந்தரம், எஸ்.சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொள்வர் என கல்லூரி பீடாதிபதி தெரிவித்தார்.

## கருத்தரங்கு

தென்மராட்சி,நவ.14

அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

முதலாவது கருத்தரங்கு நேற்றுமுன்தினம் கைதடி மேற்கு கிராமத்தில் நடத்தப்பட்டது. அகதிகள் புனர்வாழ்வுக் கழக வெளிக்கள உத்தியோகத்தர்கள் இக்கருத்தரங்கினை நடத்தினர். தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பொதுமக்கள் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (எ-117)

## கலந்துரையாடல்

இந்து ஆலயங்களும், இந்து நிறுவனங்களும் எதிர்கொள்ளும் சமகாலப்பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை இந்து சமயப் பேரவை ஒழுங்கு செய்துள்ளது.

பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவைத் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் அறிஞர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஆலயங்களின் தர்மகர்த்தாக்களையும் ஆலய பரிபாலன சபையினரையும், இந்து நிறுவனங்களின் பிரமுகர்களையும், இந்து சமய அபிமானிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறும் -

இடப்பெயர்வு நடவடிக்கை காரணமாக பூட்டப்பட்டுள்ள ஆலயங்களின் தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும் சம்பந்தப்பட்ட ஆலயங்களின் தற்போதைய நிலை பற்றிய விவரங்களுடன் வருகைதர வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# பிரிவுத்துயர் பகிர்வு

யாழ்ப்பாண பல்கலைக்கழக நிதிக்கிளை சிரேஷ்ட எழுதுவினைஞர் திருமதி கி.செ.சுதாசன் அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி வயலட் ஜெயமணி நடராசா

அவர்களது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/24870)

யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திருமதி ரொனி ஜக்குலின் (புனர்வாழ்வுப் பகுதி) அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி நடராசா ஜெயமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/24869)

யாழ். மாவட்ட செயலக ஊழியர்களும், நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.

# துயர் பகிர்கின்றோம்

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளராகக் கடமைபுரியும் எமது நண்பன் அ.உதயகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

## F.P.அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தகவல் தொழில்நுட்ப பூங்கா,*
*272, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

விரிவுரையாள நண்பர்கள்.

(10967)

# மரண அறிவித்தல்கள்

## F.P.அந்தோனிப்பிள்ளை (சீறில்)

(B.Sc. Dip. in Edu., S.L.E.S., இளைப்பாறிய அதிபர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பனான்டோபோல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் 12.11.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.11.2002) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் குறுக்குத்தெரு,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

(10973)

தகவல்:
சாந்தகுமார் (மகன்).

## திருமதி சிவலிங்கம் சாந்தி

நல்லூர், முருகேசர் வீதியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் வேஜீலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் சாந்தி அவர்கள் 12.11.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆனந்தாவீதி, மானிப்பாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் மிக்கி, மேனன், ஜெபேக்கா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் 17.11.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனந்தா வீதி,*
*மானிப்பாய்.*

(10963)

தகவல்:-
க.கணேசகுரு.

## மார்க்கண்டு மகாதேவா

(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதய கல்லூரி)

சுன்னாகத்தைச் சேர்ந்த மார்க்கண்டு மகாதேவா நேற்று (13.11.2002) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் நிவேதிதாவின் அன்புத் தந்தையும் திருமதி பூரணம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சீதாலக்ஷ்மி மற்றும் புஸ்கலாதேவி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான Dr.அருமைநாயகம், பாலசுந்தரம் மற்றும் மாலினி, நடராஜா (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), இராஜேந்திரம் (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌசல்யா யசோதா, மனோகரன், பிரபாகரன், திவாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2002) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(10975)

தகவல்.
க.இராஜேந்திரம்

## திருமதி வைத்திலிங்கம் நல்லம்மா

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் - நல்லம்மா நேற்று (13.11.2002) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்புமனைவியும் புவனேஸ்வரி, கந்தசாமி, இராசமணி, துரையம்மா, மனோன்மணி, வன்னியசிங்கம் ஆகியோரின் அருமைத்தாயாரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் கனகம்மா, காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் குமாரசாமி, காலஞ்சென்ற துரைராசா, சறோஜினிதேவி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.11.2002) வியாழன் பிற்பகல் 2மணியளவில் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"தண்டிகை வாசா"*
*உடுவில் றோட்,*
*மானிப்பாய்.*

(10977)

தகவல்:-
திருமதி இ.சுதர்மினி (பேர்த்தி - லண்டன்)

# ஓராண்டு இதய அஞ்சலி



திருமதி

## ஸ்ரீஸ்கந்தராஜா புனிதவதி

புனிதம் எனும் பூஞ்செடியே!
குடும்பத்து ஒளி விளக்கே!
வானத்து நிலவொன்று வாசலில்
வந்ததென்று நீ வந்தாய் எம்
வீட்டிலே
துன்பத்தை மறக்கடித்து
இன்பமதைத் தந்தவளே புனிதா!
உனை நினைந்து
துயரமதை நாம் சுமந்து
நடைப்பிணமாய் வாழ்கின்றோம் வையகத்தே!
*ஓம் சாந்தி!*

| | |
|---|---|
| தங்கை: | நந்தினி, |
| மைத்துனர்: | மோகன், |
| பெறாமக்கள்: | ஜஜிதா, |
| | வண்ணன், |
| | கண்ணன். |

*ஆத்தியடி,*
*பருத்தித்துறை.* (10592)



காத்தார்
அத்தான் என
எங்களுககாய்
வெண்ணூல் பூண்டு
மடைவைத்து
உடுக்கெடுத்து
உருஏற்றி
வாழேறி, தீயாடி
எனினும்
எங்களுள் ஒருவனாய்
உன்னால்
உன்னால் மட்டுமே.

நாமெல்லாம்
நினைந்து
நினைந்து வெம்மி....

உனக்கென்ன
ஆறு மணி அவஸ்தையில்....நீ
இங்கு துடுப்பிழந்த வள்ளங்களாய்...

ஜயவர்த்தனபுர பல்கலை தாக்குதல்கள் குறித்து

# 20 மாணவர்கள் இதுவரை கைது; மேலும் சிலர் தேடப்படுகின்றனர்

கொழும்பு,நவ.14

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் சமந்த, கொலையுண்டமை தொடர்பாக மேலும் 6 பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். வேறு சில மாணவர்கள் பொலீஸாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஆறு மாணவர்களையும் சேர்த்து இதுவரை 20 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்திருக்கிறார். கைது செய்யப்பட்ட மாணவர்களில் 12 பேர் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை அன்று அடையாள அணிவகுப்புக்கு ஆஜர்ப்படுத்துமாறு கங்கொடவில நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

பொலீஸாரால் தேடப்படும் சில மாணவர்கள் தலைமறைவாகியிருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. அவர்களைக் கைதுசெய்ய பல பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

கொல்லப்பட்ட மாணவன் சமந்தவின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. (ஐ)

## நூல்வெளியீடு

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில், புத்தகப் பண்பாட்டை நோக்கிய மாதாந்த பௌர்ணமி நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு, வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் வேல் அமுதனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மாவை வரோதயனின் 'வேப்பமரம்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு இடம்பெறும். (ம)


VISA | PLUS | VISA Electron | MasterCard | Cirrus | Maestro

உங்களுடைய வங்கி அட்டை இந்தக் குறியீடுகளைக் கொண்டுள்ளதா?

அப்படியானால், உங்கள் வங்கிக்கணக்கு எந்த வங்கியில் இருந்தாலும், உங்களுடைய அட்டை எந்த வங்கியை சேர்ந்ததாக இருந்தாலும் கொமர்ஷல் வங்கியின் தன்னியக்க இயந்திரம் (ATM) மூலம் பணத்தை மீளப்பெற முடியும் நாடுபூராகவும் 130க்கும் மேற்பட்ட தன்னியக்க இயந்திரங்களினூடாக (ATM) நாட்டின் நான்கு திசைகளையும் இணைத்துள்ள இலங்கையிலேயே மிகப்பரந்த ATM வலையமைப்பு மூலம் உங்களுடைய வங்கிக் கணக்கில் 24 மணித்தியாலமும் பணத்தை மீளப்பெற முடியும்.

கொமர்ஷல் வங்கி

Q & E Advertising

# ஐ.எஸ்.ஓ 9001 சான்றிதழ் பெற்ற நவலோக நிறுவனத் தயாரிப்புகள்

யுத்த அனர்த்தத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் இன்றைய அவசியத் தேவைகளில் ஒன்று பொருளாதார சுபிட்சமாகும். சமாதானச் சூழ்நிலை நிலவும் இன்றைய கால கட்டத்தில் அத்தகைய பொருளாதார மேம்பாட்டை குடாநாட்டு மக்கள் அடைய உதவுவது அனைவரின் கடமையாகும். இந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே கொழும்பு நவலோக நிறுவனத்தினர் தமது உற்பத்திப் பொருள்களில் ஒரு தொகுதியை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்த முனவந்துள்ளனர்.

இது குறித்து நவலோக நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய எச்.கே.தர்மதாஸ கூறுகையில்:-

'எமது நாட்டில் தற்போது உருவாகிவரும் சமாதானச் சூழ்நிலையானது வடக்கிற்கும் தெற்குமிடையே ஓர் அன்னியோன்யமான உறவு முறையினை எழுச்சி பெறச்செய்வ தோடு மட்டுமன்றி, பொருளாதாரப் பிணைப் பிணையும் மேலும் வலுப்பெறச் செய்வதாகவும் அமைகிறது. இலங்கை மக்கள் சகலருக்குமிடையில் எதுவித இனபேதமுமின்றி சமாதானத்தின் பெறுபேறுகளைப் பகிர்ந்துகொள்வதானது மகிழ்ச்சிகரமான ஒரு சூழலை உருவாக்குவதாக அமைகிறது' - என்று தெரிவித்துள்ளார்.

அவரது எண்ணக் கருத்தை உறுதிப்படுத்துவதுபோலவே நவலோக நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்த முன்வந்துள்ள பொருள்கள் அமைந்துள்ளன.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடாநாட்டுப் பொருளாதாரத்துக்கு ஏற்ற வகையிலேயே பொருள்களை நவலோக நிறுவனம் சந்தைப்படுத்தியுள்ளது.

தானிய வகைகள், மரக்கறி வகைகள் மற்றும் பத்திரப்படுத்தி வைக்கப்படவேண்டிய அனைத்துப் பொருள்களையும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த அவசியமான உட்கட்டமைப்பு முறையினை ஏற்படுத்திக்கொடுக்கக் கூடிய பொருள்களையே நவலோக நிறுவனம் யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தியுள்ளது.

விவசாய உறைகள் (பொலி உறைகள்), பாய்களும், நிலவிரிப்புகளும், பிளாஸ்ரிக் கப் வகைகள், குளிர்பானம் அருந்தும் குழாய்கள், சங்கிலிக் கொழுவுவேலிகள், முட்கம்பிகள எனப் பலதரப்பட்ட பொருள்களே முதற்கட்டமாக தற்போது சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.

நவலோக நிறுவனம் தற்போது சந்தைப்படுத்தும் பொருள்கள், ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கிடைக்கக்கூடும். ஆனால், சர்வதேச ரீதியில் தர நிர்ணயம் செய்யும் ஐ.எஸ்.ஓ.9001 நிறுவனத்தின் நற்சான்று பெற்றவை நவலோக உற்பத்திப் பொருள்களே.

ஆகவே, உயர்தரம், நம்பகத்தன்மை, நியாயமான விலை அனைத்திலும் மேலாக வாடிக்கையாளர் பேணல் என நவலோகவின் உற்பத்திகள் முத்திரை பதித்துள்ளன. விற்பனையில் மட்டுமன்றி பொலித்தீன் உறைகள், கப்வகைகள் மற்றும் பாய்களில் பெயர் அல்லது இலச்சினைகள் போன்றவற்றை அச்சிடும் சேவையையும் நவலோக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்கின்றது.

இவையனைத்தும் தென்பகுதி மக்களை நவலோக உற்பத்திகள் எந்த அளவில் திருப்திப்படுத்தியுள்ளதோ அதே அளவுக்கு வடபகுதி மக்களையும் நீண்டகாலத்துக்கு திருப்திப்படுத்தும் என்பதை உறுதிப்படுத்துகின்றன.



கடந்த 9ஆம் திகதி நவலோக நிறுவனத்தினரின் உற்பத்திகளுக்கான முகவர் நிலையம் யாழ்.நகரில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நவலோக பொலிசக்ஸ் நிறுவன சந்தைப்படுத்தும் முகாமையாளர் சரோஜ் குணதாஸ, தொழிலதிபர் தேசபந்து ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். நவ லோக நிறுவனத்தின் தொழிற்சாலை முகாமையாளர் திலக் எதிரிசிங்க, நிர்வாக அலுவலர் சபாம்பிள்ளை ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# 'எக்ஸ்போ' விமான சேவையில் நவீனரக விமானம் அறிமுகம்

கடந்த ஜூன் மாதத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையினை ஆரம்பித்த 'எக்ஸ்போ' பயணிகள் விமானப் போக்குவரத்து நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கான விமான சேவையில் ஏ.என்.24 ஆர்.வி.ரக விமானத்தினை ஈடுபடுத்தவுள்ளது.

உள்நாட்டு விமான நிறுவனமான 'எக்ஸ்போ' பயணிகள் விமான நிறுவனம் சகல விதத்திலும் சர்வதேச தரம் வாய்ந்ததாக பயணிகள் விமானப் போக்குவரத்து பணிப்பாளரினால் சிபார்சு செய்யப்பட்ட ஒன்றாகும்.

இது யாழ்ப்பாணத்துக்கான சேவையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான விமான சேவையினை கடந்த நான்கு மாதங்களாக வெற்றிகரமாக நடத்திவரும் ஒரு சூழ்நிலையில் தற்போது இச்சேவையில் ஏ.என்24 ஆர். வி.ரக விமானத்தினை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த வகையில் வேறு உள்நாட்டுச் சேவைகளான வீரவில்ல, திருகோணமலை, கொக்கல ஆகிய இடங்களுக்கான சேவைகளிலும் இந்த ரக விமானத்தையே வெகு விரைவிலிருந்து அறிமுகப்படுத்த நிறுவனம் முடிவெடுத்துள்ளது.

இதேவேளை, 'எக்ஸ்போ' பயணிகள் விமான நிறுவனம் தனது சேவைகளை நவீன மயப்படுத்தும் மற்றும் விஸ்தரிக்கும் எதிர்காலத் திட்டங்களையும் வகுத்து வருகிறது.

கொழும்பு - யாழ்.விமான சேவைகளின் போது குறித்த காலத்தில் அட்டவணைகளுக்கு ஏற்ப நேரம் தப்பாது சேவைகள் நடத்தப்படுவதற்கு அதிகளவு முக்கியத்துவத்தை அளித்து செயற்பட்டு வருவதாக நிறுவனத்தின் உயரதிகாரியான சவ்ரி மரிக்கர் தெரிவித்தார்.

# மூட்டுக்களை புனரமைக்கும் "ரிகோவா"

வாலிபம் முதல் வயோதிபர்வரை அனைவரையும் பாதிக்கும் உபாதைகளில் மூட்டு வலியும் ஒன்றாகும். மானிட இனத்தில் மட்டுமன்றி பல்வேறு உயிரினங்களின் உடல் அமைப்பில் மூட்டுக்கள் காணப்படுகின்றன. இம்மூட்டுக்களின் உதவியுடன்தான் பல்வேறு வேலைகளைச் செய்யக் கூடியதாக உள்ளது.

உதாரணமாக படிக்கட்டுகளில் ஏறுதல், நடத்தல், ஓடுதல், சமைத்தல் என அடுக்கிக்கொண்டே போகலாம். மூட்டுக்கள் உடலமைப்பில் இன்றியமையாத ஒரு கூறாகும். அங்க அசைவுகளின்போது பிரதான பாகமாக இதுவே தொழிற்படுகிறது.

மூட்டுக்கள் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படலாம். சிறுவயதில் நடக்க ஆரம்பிக்கும் குழந்தை தட்டுத்தடுமாறி விழும்போது முதலில் பாதிப்படைவது முழுங்கால் ஆகும். இங்குதான் முக்கியமான மூட்டு உள்ளது. எனினும், வளரும் குழந்தை இவ்வாறு கீழே விழும்போது மூட்டுக்கள் பாதிப்படைவதில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. குழந்தைப் பருவத்தில் மூட்டுக்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தி (வளர்ச்சி) அடைதல், குழந்தையின் உடல் நிறை என்பனவும் அடங்கும்.

மூட்டுக்களில் ஏற்படும் தாக்கங்கள், விளையாட்டின்போது ஏற்படும் விபத்துக்கள், மூட்டு உடைவு, இடமாறிய மென் இழையம், கிழிந்த மென் இழையம், தொழில் புரியும் போது ஏற்படும் பாதிப்புக்கள், மூட்டுக்களில் ஏற்படும் நோய்க்கிருமிகளின் தாக்கம், உடற் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்படும் மூட்டு நோய்கள், மருந்துகள் ஏற்படுத்தும் தாக்கங்கள், நீரிழிவு நோய், உடல் நிறை அதிகரிப்பு, வயோதிபநிலை போன்ற பல காரணங்களால் தோன்றுகின்றன.

மூட்டுக்கள் சிறுபராயத்தில் வளர்வதுபோல வளர்ந்தோரில் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைவதில்லை. மேலும் மூட்டுக்களின் உள்ளே எலும்பு முனைகளை மூடி (மென் இழையம்) என்ற எலும்புத் தொகுதி உள்ளது. இரு முனைகளிடையே உராய்வு ஏற்படுவதை மென் எலும்பு தடுக்கின்றது. உராய்வு ஏற்படின் வலியேற்படும். எனவே, மென் எலும்பில் பாதிப்பு ஏற்படும்போது மூட்டுவலி ஏற்படும்.

மூட்டுவலியைப் போக்க பல்வேறு வலிகுறைப்பு, வலி நீக்கி மருந்துகள் பாவிக்கப்படுகின்றன. இம்மருந்துகள் வலிமை/வேதனையைக் குறைக்கும் ஆனால், மூட்டுக்களை மீளமைக்க மாட்டாது.

வேதனை குறைந்தவுடன் நோயாளி தொடர்ந்து தினசரி வேலைகளை மேற்கொள்வார். எனவே, மூட்டுக்களின் உள்ளமைப்பு மேலும் பாதிக்கப்படும். இறுதியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிவரும்.

அதேவேளை, மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். இவற்றில் வயிற்றுப் புண் பிரதானமானது. மருந்துகளை பாவிக்காவிடின் வலி தொடரும். எனவே, மூட்டு வலியிலிருந்து மீள்வதற்கு மூட்டுக்கள் புனரமைக்கப்பட வேண்டும் அல்லது புதுப்பிக்கப்படவேண்டும்.

**தொழில் வளம்**

மேலை நாடுகளில் தற்போது "குளுக்கோசமின்" என்னும் புதிய மருந்து பாவிக்கப்பட்டு வருகின்றது. இம்மருந்து மூட்டு வலியிலிருந்து முற்றாக நிவாரணம் அளிக்கின்றது. மற்றும் பாதிக்கப்பட்ட வலிமிக்க மூட்டுக்களை மீளமைக்கின்றது. "குளுக்கோசமின்" உணவில் காணப்படும் ஒரு புரதம் சேர் சீனியாகும். இது மென் எலும்பு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றது. இலங் கையில் தற்போது குளுக்கோசமின் "ரிகோவா" (Recova) என்னும் பெயரில் விற்கப்படுகின்றது. "ரிகோவா" ஐ ஆர்கேம் (ARKEM) நிறுவனத்தினர் இந்தியாவில் புகழ்பெற்ற "மெக்ஸர்" நிறுவனத்தினரிடம் இருந்து இறக்குமதி செய்கின்றனர். ரிகோவா மருத்துவ ஆலோசனையுடனோ அல்லது தற்போது நேரடியாக யாழ்.நகரின் பிரதான மருந்தகங்களிலோ பெற்றுக்கொள்ளலாம். எனவே, இன்று முதல் மூட்டுவலிக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம்.

# கூடாத கூட்டத்தால் குழம்பி....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட்டிருந்த வேளையில் அவற்றுக்கு முகங்கொடுத்து, தென்பகுதியில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்று, கொலைகள், இரத்தம் சிந்திய வன்முறைகள் ஆகியவற்றின் மத்தியில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டவர் றிச்சர்ட் பத்திரன. 1988 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியைத் தழுவிப் போக்கிடம் அற்றிருந்த நிலையில், 1989 பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் தென்பகுதியில் தலைமைத்துவம் ஏற்று பிரசார நடவடிக்கைகளை நெறிப்படுத்தியவர் றிச்சர்ட் பத்திரன ஆவார். அவ்வாறு தலைமைதுவம் ஏற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றிய பின்னர் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க சந்திரிகாவைக் கட்சிக்குள் கொண்டுவந்ததற்காக அனுரா பண்டாரநாயக்க உட்பட்ட குழுவினர் சிறிமாவோவுக்கு எதிராகக் கிளம்பிய வேளையில் கட்சியையும் ஸ்ரீமாவோவையும் மற்றும் சந்திரிகாவையும் பாதுகாக்கும் நடவடிக்கையில் முன்னின்று இயங்கியவர் றிச்சர்ட் பத்திரனவேயாவார்.

அதன் பலனாக றிச்சர்ட் பத்திரன, அனுரா பண்டாரநாயக்கவின் குழுவினரின் தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்தது. ஆயினும், அவற்றால் அவர் சோர்ந்து விடவில்லை. ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம், பிரேமதாஸா நாடாளுமன்ற அமர்வுக்கு சமுகமளித்திருந்தவேளை பிரேமதாஸாவின் முகத்துக்கு நேராகக் குற்றஞ்சாட்டிப் பேசியவர் றிச்சர்ட் பத்திரன. அவ்வேளையில் காமினி திஸாநாயக்க மற்றும் லலித் அத்துலத்முதலி ஆகியோர் அமைதி காக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தபோது பிரேமதாஸாவுக்கு எதிரான நாடாளுமன்ற விவாதத்தை முன்னெடுக்க வேண்டிய கடமை றிச்சர்ட் பத்திர மீது சுமத்தப்பட்டது. அவர் அதனைத் திருப்திகரமாகச் செய்துமுடித்தார்.

அது மட்டுமன்றி, ஜனாதிபதி விஜேதுங்கவின் ஆட்சிக் காலத்தில் தென்மாகாண சபைக்குள் அரசியல் குத்துக்கரணங்கள் இடம்பெற்ற வேளையில் மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கான முயற்சிகளுக்குத் தலைமைதாங்கியவர் றிச்சர்ட் பத்திரனவே. கட்சியைவிட்டு அனுரா பண்டாரநாயக்க வெளியேறிச சென்ற அத்தருணத்தில் அவருக்கெதிராகப் பிரசாரம் மேற்கொண்ட முக்கிய உறுப்பினராக றிச்சர்ட் பத்திரன விளங்கியமையால், தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின்போது அனுரா பண்டாரநாயக்கவின் கடும் கண்டனக் கணைகளுக்கு அவர் உட்பட நேர்ந்தது. அவர் இவற்றையெல்லாம் தான் சார்ந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நன்மை கருதியே செய்தார். அரசியலுக்குப் புதியவர்கள் அவ்வேளையில் சந்திரிகாவுக்கு ஆதரவளித்தபோதிலும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உறுதியின்றியே இருந்தனர். சில சிரேஷ்ட உறுப்பினர்கள் சந்திரிகாவுக்கு எதிராக சிறிமாவோவைத் தூண்டிவிட்டனர். ஆயினும், றிச்சர்ட் பத்திரன கட்சியின் நன்மை கருதி அவ்வேளையில் சந்திரிகாவுக்கே ஆதரவளித்தார். அவ்வகையான திடமான தீர்மானம் மேற்கொண்ட ஒரேயொரு சிரேஷ்ட உறுப்பினர் றிச்சர்ட் பத்திரனவேயாவார்.

1994இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய வேளையில் றிச்சர்ட் பத்திரனவுக்குக கல்வியமைச்சர் பதவி வழங்கப்பட்டதாயினும், அவ்வமைப்புச் சம்பந்தமான சகல தீர்மானங்களும் ஜனாதிபதியின் செயலாளர் காரியாலயத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன. அது பற்றிக்கூட அவர் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. 2001 ஜூன் மாதத்தில் பொதுசன முன்னணி அரசுக்கெதிரான ஐக்கிய தேசிய முன்னணி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தவேளையில் அத்தீர்மானத்தை ஆதரிக்குமாறு றிச்சர்ட் பத்திரன கோரப்பட்டார். ஆயினும், அவர் அவ்வாறு செய்யவிரும்பவில்லை. அவர் அவ்வேளையில் சந்திரிகாவும் அவரைச் சுற்றியிருந்தவர்களும் விரும்பிய விதத்திலேயே நடந்துகொண்டார். அவர்களது ஆலோசனைகள் குறித்து அவருக்குச் சந்தேகம் இருந்தபோதிலும், அவர்களது ஆலோசனைகள் யாவற்றையும் கட்சியினதும், அரசினதும் பாதுகாப்புக் கருதி அவா நாடாளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றினார். ஜனாதிபதியைச் சூழ இருப்பவர்களது மட்டுமல்ல தனது நிலைப்பாடும் ஒதுக்கப்படுவதாக 2001 பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த சமயத்தில் அவர் உணரத் தலைப்பட்டார். அந்த வேளையிலிருந்து, தேசிய அரசொன்றினை உருவாக்க இப்போதுகூட காலம் கடந்துவிடவில்லை என அவர் கூறத்தலைபட்டது நாட்டையும், கட்சியையும் மற்றும் ஜனாதிபதியையும் காப்பாற்றிக்கொள்ளும் பொது நோக்கிலேயேயாகும்.

இக்கருத்தைத் தெரிவித்தமைக்காக அவர் ஜனாதிபதியினால் விளக்கம் கோரப்பட்டார். இது தொடர்பாக றிசசர்ட் பத்திரன போன்றோர் தேசிய அரசொன்று அமைக்கப்படவேண்டுமெனக் கருத்துத் தெரிவித்துவருவது வயது மூப்பின் காரணமாக ஏற்படும் தடுமாற்றக் கதையேயென ஒருசமயம் ஜனாதிபதி கூறியிருந்தார். இவ்வகையாக விமர்சிக்கப்பட்டமை பற்றியோ, தாம் கூறிய கருத்துக்கு விளக்கம் கோரப்பட்டமை பற்றியோ எதனையும் கணக்கெடுக்காமல் றிச்சர்ட் பத்திரன தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வந்தார்.

இன்று ஜனாதிபதி சந்திரிகா, றிச்சர்ட் பத்திரனவின் நிலைப்பாட்டுக்கே வந்துள்ளார். நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடும் ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தை ஆறு ஆண்டுகளுக்கு நீக்குவதென்ற 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கான றிச்சர்ட் பத்திரனவின் நிலைப்பாட்டுக்கு இணங்கும் வகையில் 3 ஆண்டு காலத்துக்கு அவ்வதிகாரத்தை நீக்கிவிடுவதற்குத் தான் தயாராயிருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இவற்றையெல்லாம் நோக்கும் போது, எஸ்.பீ.திஸாநாயக்க, ஜி.எல். பீரிஸ், மகிந்த விஜேசேகர மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் அன்று கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கே இன்று ஜனாதிபதி சந்திரிகா வந்துள்ளார். இத்தீர்மானத்தை அவர் அன்றே எடுத்திருந்தால் இன்று இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசினூடாக நாட்டை ஆட்சி செய்திருக்க இயலும். குதிரை வெளியேறி ஓடிய பின்னர் லாயத்தை மூட முயல்வது போன்றதே ஜனாதிபதியின் இன்றைய நிலை. இவையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகாவின் தவறா? அன்றேல் அவரைச் சுற்றியிருந்து ஆலோசனைகள் கூறுபவர்களின் தவறா என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது பொ.ஐ.முன்னணி ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடுசெல்லத்தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராத நோயா?

ஏவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி

இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தியருகில்)

*பார்வையிடும் நேரம்:* காலை 9மணிமுதல் மாலை 4மணிவரை

(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(10968)



*சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)*

## காகிதாதி, பாடசாலை தரமான உள்வீட்டுப் பொருள்கள் விற்பனை நிலையம்

சங்கானையில் இருந்து யாழ்ப்பாணம் வரை

- மாணவர் நலன் கருதி - எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## திறப்பு விழா

*காலம்* : இன்று (14.11.2002) வியாழக்கிழமை காலை 11.00 மணி

*இடம்* : யாழ்ப்பாணம் நவீன சந்தை, மேல்மாடிக் கட்டடம் இல. 11

*தலைவர்* : திரு. கா.நடராசா அவர்கள் *(சங்கானை ப. நோ. கூ. சங்கம்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பணிப்பாளரும், பணியாளர்களும்.

(C/24872)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய நிர்வாக சபை உறுப்பினரும் ஆயுட்கால மகாசபை அங்கத்தவருமாகிய

**பொன்னம்பலம் நடராசா (நடேசுமாமா)**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கொழும்புத்துறை மேற்கு, வதரிபீட விநாயகர் ஆலயம்.* ஆலய பரிபாலன சபையினர்.

(10960)

## 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பு ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் தொடர்பாக பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பீட மாணவர்கள் நேற்று தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

பகிஷ்கரிப்பு காலவரையறை இன்றி தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தொடரும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.பரணிதரன் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை 10 மணியளவில் அனைத்துப்பீட மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஒன்று கூடி இது தொடர்பாகக் கலந்துரையாடினர். அதன் பின்னரே இந்தத் தீர்மானத்தை அவர்கள் எடுத்தனர் எனக் கூறப்பட்டது.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் பல்கலைக்கழக நிர்வாகம் அசமந்தப்போக்கைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது என்று மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(எ-9)


**ராஜா** யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த



**வில்லன்** (ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30
விசேட காட்சி: 9.30 (புதிய நேரம்)

**நாகம்ஸ்** சுன்னாகம்

குணால், மனோஜ், அனிதா, நம்பியார் நடித்த

**வருஷமெல்லாம் வசந்தம்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்.)
18.11.2002 முதல் கலங்கரை விளக்கம்

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த **யூத்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45 மட்டும்
UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)

**லக்ஷ்மி** இணுவில்

விஜய் - சிம்ரன், மணிவண்ணன் நடிப்பில்

**துள்ளாத மனமும் துள்ளும்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30


## பெற்றோர்தின விழா

சுழிபுரம்,நவ.14

சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயத்தின் பெற்றோர்தின விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வயை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-28)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 08 - 1943



மறைவு 14 - 11 - 2001

அமரர்

**R.செல்லையா துரைரத்தினம்**

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன இளைப்பாறிய உத்தியோகத்தர்)

அன்பும், பண்பும், கனிவும் கொண்டு
எம்மை வழி நடத்திய செல்வமே - நீங்கள்
எங்களை விட்டு ஆண்டொன்று பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் அன்பு நெஞ்சங்களை
விட்டு நீங்காதப்பா....

*தையிட்டி, காங்கேசன்துறை.* (10976) பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### செபஸ்ரியாம்பிள்ளை செல்லையா

(முன்னாள் யாழ். மாநகரசபை ஊழியர்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ். மத்தியூஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை செல்லையா 12.11.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்ராசா மற்றும் அக்னேஸ், பீற்றர், சின்ராசா (சவு.தி), மல்லிகா, றூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பஞ்சலிங்கம், நேசமலர், வேபி, கிறிஸ்ரி பாக்கியராஜா (யாழ்.மின்சாரசபை), ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் யோணசன், சதீஸ், டக்சன், ஜெஸ்மீன், ஜெமிலா, சர்மிலா, தாட்சாயினி, பிரியா, பிரதீபன், பிரபா, பிரசாந், நிசாந்தன், பிரசன்னா, மேவின், நிவின், யூலி, யூட், விதுசா, றூபிகா (பிரான்ஸ்), ரெபெக்கா (பிரான்ஸ்), பெலிக்ஸ், உதயராணி, இராயேஸ்வரி ஆகியோரின் பேரனும் லாவன்யா, டனுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (14.11.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (10978) தகவல்: கிறிஸ்ரி பாக்கியராசா (மருமகன்)

### குமாரசாமிக் குருக்கள் தில்லைநாயகி அம்மா

காரைநகரைச் சேர்ந்த குமாரசாமிக்குருக்கள் தில்லைநாயகி அம்மா அவர்கள் நேற்று (13.11.2002) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2002) வியாழக்கிழமை பி.ப. 4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.* (10979) தகவல்: பு.பிரபாகரக் குருக்கள்.

### நிமலதாசன் ஆன்மேரி றினோல்டா (ஜான்சி)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 34,புங்கங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நிமலதாசன் ஆன்மேரி றினோல்டா (ஜான்சி) நேற்று (13.11.2002) புதன்கிழமை அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் நிமலதாசனின் (இன்பன்) அன்பு மனைவியும் தர்மசகாயம்பிள்ளை - றீற்றம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இம்மானுவேல் மற்றும் அக்கினேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கமலதாசன் (ஜான்சன்), கனோஜினி, கஜேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கொண்சி, சூட்டி, புனிதசீலி (ஆசிரியர், பாலிநகர் மகாவித்தியாலயம், வவுனிக்குளம்), போலின் ஆன் கத்தரின், கரன், கூபா, கசில்டா, (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அன்ரன் (துரை), ஜோன்சிங்கராஜர், ஜோச், செல்வதி, ராஸ்வதி, ராஜ்குமார், கிரேஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (14.11.2002) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.34, புங்கங்குள வீதி, யாழ்ப்பாணம்.* (10980) தகவல் சா.தர்மசகாயம்பிள்ளை (தந்தை)

## வேலணை பிரதேச சபை
## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2003

வேலணை பிரதேச சபையின் நிர்வாக சபை எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2003 ஆம் திகதி முதல் 31.12.2003 ஆம் திகதி வரையான காலப் பகுதிகளுக்கு குத்தகை விடுவதற்கான கேள்விகள் 22.11.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒருவர் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 14.11.2002ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 21.11.2002 நண்பகல் 12.00மணி வரை வேலணை பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் கீழ் குறிப்பிடப்படும் கேள்வி வைப்புப் பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றை பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை வேலணை பிரதேச சபை, தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலும், இணைப்பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.20, செட்டித்தெரு, நல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவை பற்றிய மேலதிக விவரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. குத்தகை விவரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படக் கூடியது | கேள்வி பத்திரப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| (I) சந்தைகள் | | | |
| 01) வேலணை துறையூர் மீன் சந்தை | 1000/= | 100/= | 125000/= |
| 02) செட்டிபுலம் மீன் சந்தை - வேலணை | 750/= | 100/= | 30000/= |
| புங்குடுதீவு உப அலுவலகம் | | | |
| புங்குடுதீவு மீன் சந்தை | 750/= | 100/= | 25000/= |
| நயினாதீவு உப அலுவலகம் | | | |
| 01) நயினாதீவு தெற்கு மீன் சந்தை | 1000/= | 100/= | 70000/= |
| 02) நயினாதீவு வடக்கு மீன் சந்தை | 1000/= | 100/= | 60000/= |
| அல்லைப்பிட்டி உப அலுவலகம் | | | |
| அல்லைப்பிட்டி மீன் சந்தை | 750/= | 100/= | 30000/= |
| (II) இறைச்சிக் கடைகள் | | | |
| புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடை | 1000/= | 100/= | 35000/= |

*குறிப்பு:-*

- கேள்விப்பத்திரப் பணம், கேள்வித் தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட 20%வற் (vat) வரியும் மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

*வேலணை பிரதேச சபை, வேலணை. 13.11.2002*

திரு. ந.கருணாகரகுருமூர்த்தி (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

# இன்று முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமிக்ஞைகள் இல்லாததே இதற்குக் காரணம். இந்த மாதிரியான சில சமயங்களில் கடற்படை படகுகளுக்கும சேதங்கள் ஏற்படுகின்றன. வலைகள் சிக்கி கடற்படைப் படகுகளின் 'புறொப்ளர்'கருவி அடிக்கடி சேதமடையும்.

இந்த இருதரப்பு சேதங்களையும் தவிர்க்க மீனவர்களின் ஒத்துழைப்பு அவசியம் என புலிகளிடம் சுட்டிக் காட்டினேன். இரவில் மீனவர்கள் ரோந்துவரும் கடற்படையினருடன் இணைந்து செயற்படவேண்டும் என்று கூறினேன். புலிகள் அதற்கு இணங்கியுள்ளனர்.

கடலில் 24 மணி நேர மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் மீனவர்களின் படகுகளை கடற்படையினர் சோதனை செய்வார்கள். சட்டவிரோத ஆயுதக் கடத்தல், சட்டவிரோதமான ஆள்கள் நாட்டுக்குள் நுழைதல், சட்டவிரோதமான பொருள்கள் நாட்டுக்குள் வருதல் போன்றவற்றைத் தடுக்க படகுகளைக் கடற்படையினர் சோதனை செய்யவேண்டியுள்ளது. அது தவிர்க்கமுடியாது என்று சந்திப்பில் புலிகளிடம் கூறினேன் என்றார்.

மீன்பிடித் தடைகளை நீக்குவது தொடர்பாகக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

வர்த்தமானி அறிவித்தலின்படி 50 நிலைகள் ஊடாக மீன்பிடிக்க அனுமதித்திருந்தோம். தற்சமயம் அவற்றின் எண்ணிக்கையை 76 நிலைகளாக அதிகரித்துள்ளோம். இந்த நிலைகள் ஊடாக எந்தநேரமும் தொழிலுக்குச் செல்லமுடியும்.

இந்த நிலைகள் அனைத்தின் ஊடாகவும் இரவுநேரத்தில் மீனவர்கள் கரைதிரும்ப அனுமதிக்கவேண்டும் என்று புலிகளின் பிரதிநிதிகள் கோரினர்.

உடனடியாக அது சாத்தியமாகாது. அதற்குப் பாதுகாப்புக் காரணங்கள் பல உள்ளன. கடற்காற்று, காயம், சுகவீனம் போன்ற காரணங்களால் மீனவர்கள் இரவில் திரும்பினால் அவர்களை அனுமதிக்கமுடியும்.

இன்றைய கூட்டத்தின் பின்னர் காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மாதகல் ஆகிய இடங்களிலுள்ள எட்டு நிலைகள் ஊடாக இரவில் எந்தநேரத்திலும் மீனவர்கள் கரைதிரும்ப அனுமதிக்க முடிவுசெய்துள்ளேன் - என்றார்.

தீவகத்தில் அரசியல் பணிகளை மேற்கொள்ளச்செல்லும் விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவது குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டதா என்று கேட்டபோது -

அந்த விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்படவில்லை. எனினும், தீவகத்தில் உள்ள கட்டுப்பாடுகளை படிப்படியாகத் தளர்த்த நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். எதிர்காலத்தில் கடற்படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நல்லெண்ண - நட்புறவான - உறவுகள் பேண நடவடிக்கை எடுக்கப்படும் - என்று பதிலளித்தார்.

புலிகளுக்கும் - கடற்படைக்கும் இடையில் உள்ள நல்லுறவு எவ்வாறு பேணப்படுகின்றது என்று கேட்டபோது "உறுதியாக நல்லுறவு முன்னெடுக்கப்படுகின்றது" என்று சிரித்தவாறு பதிலளித்தார்.(ம-3-8)

## ஏ-9 வீதியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜீவிகளும், பொதுமக்களும் கோரினர். நாம் எப்போதோ அதற்கான அனுமதியை வழங்கிவிட்டோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் இரவில் பணியாற்ற மறுக்கின்றனர். இதனால் பாதையை 24மணி நேரமும் திறக்க முடியாதுள்ளது என்று அரசு கூறிவருகின்றது. இந்த விடயத்தில் அரசுதான் முடிவு எடுக்கவேண்டும் - என்றார் அவர்.
(ம-3-8)

## புலித்தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தது அவர்கள் தங்கள் தற்காப்பு ஆயுதங்கள் மற்றும் அவர்களுக்குரிய மெய்க்காவலர்கள் சகிதம் சென்று வர அனுமதிக்கப்படவேண்டும்.

புலிகளின் தளபதிகளின் பாதுகாப்பை புலிகளே உறுதி செய்துகொள்ளவேண்டும் என்பதை நோர்வேத் தரப்பு உணர்ந்துள்ளது. அரசுத் தரப்பும் இதனை ஏற்கும் நிலையில் உள்ளது.

அரசுத் தரப்புக்கும் புலிகளுக்கும் இடையே இது விடயத்தில் இணக்கம் கண்டு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. இது தொடர்பான உத்தேச உடன்பாட்டின் வரைபு ஒன்று எமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சில திருத்தங்கள் செய்யவேண்டியுள்ளது. அந்தத் திருத்தங்களை செய்து அந்த வரைபை விரைவில் நோர்வேத் தரப்பிடம் கையளிக்கவிருக்கின்றோம்.

கடல், தரை, வான் ஆகிய மார்க்கங்கள் ஊடாக புலிகளின் தளபதிகள் தமது தற்பாதுகாப்புக்கான கைத்துப்பாக்கியுடன் பத்து மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் சென்று வருவதற்கு இந்த உடன்பாடு வழிவகுக்கும்.

நோர்வே தரப்பு - இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்புகளுக்கும் இடையிலான இந்த உடன்பாடு விரைவில் நடைமுறைக்கு வரும் சாத்தியம் உள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி தெல்லிப்பழையில் இடம்பெறவிருக்கும் பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்துக்கு முன்பாக இந்த உடன்பாடு எட்டப்பட்டால் வடமுனைக்கட்டளைத் தளபதி கேணல் தீபன் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடும் - என்றார் புலித்தேவன்.
(ஐ-ம-3-8)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அன்றையதினம் பிரேத பரிசோதனை அறிக்கை நீதிவான் முன் சமர்ப்பிக்கப்படவில்லை. பிரேமலதா என்பவர் தெரிவித்த முறைப்பாட்டின் பேரில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நிசாந்தனைக் கைதுசெய்யும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்தார். எனினும், திங்களன்று பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. நஞ்சருந்தியதால் ஏற்பட்ட மரணம் என்றும், உடலில் காயங்கள் ஏதும் தென்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதனையடுத்தே நிசாந்தனைக் கைதுசெய்யும் உத்தரவை நீதிமன்றம் விலக்கிக்கொண்டிருக்கிறது. எனினும், உயிரிழந்தவர் நஞ்சருந்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்ட விடயம் குறித்து விரிவான புலன் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# மூன்று நாய்கள் கடித்து வயோதிபர் படுகாயம்

கொழும்புத்துறை,நவ.14
யாழ். கொட்டடி லைடன் சந்திப் பகுதியில் வயோதிபர் ஒருவருக்கு மூன்று நாய்கள் ஒன்றாகச் சேர்ந்து கடித்ததில் அவர் மூக்கிலும் முகத்திலும் படுகாயமடைந்த நிலையில் யாழ. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொட்டடியைச் சேர்ந்த எஸ்.பாலசுந்தரம் (வயது 75) என்பவரே இவ்வாறு நாய்களால் கடியுண்டவராவார்.

நாய் ஒன்று துரத்தியதையடுத்து வயோதிபர் நிலத்தில் விழுந்துவிட்டார் என்றும் -

சம்பவத்தை அடுத்து அந்த இடத்துக்கு இரண்டு நாய்கள் மூன்றாவது நாயுடன் சேர்ந்து வயோதிபரின் மூக்கிலும் முகத்திலும் பலமுறை கடித்துக் காயப்படுத்தின எனவும் -

கூறப்படுகிறது.

உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்த இளைஞர்கள் மூன்று நாய்களையும் அடித்துக்கொன்று விட்டனர். (எ-30)

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனர் எனக் கூறப்பட்டது.

தாக்கப்பட்ட மூன்றாவது அலுவலகம் ஹோமாகம, கொடகமவில் உள்ளது. இந்த அலுவலகம் நேற்று இரவு தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதல்கள் குறித்து தலங்கம, மஹரகம, ஹோமாகம பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-4)

## வெளிநாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றுக்குப் பதிலளிக்கையில் இவற்றை அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்திருந்தாலும, பதிவுசெய்யப்படாதிருந்தாலும் வெளிநாடுகளில் தொழில் செய்யும் இலங்கையர் அனுப்பும் பணத்துக்கு வரி அறவிடப்படமாட்டாது எனவும், நிதியமைச்சர் இன்று சபையில் இது தொடர்பான விவரங்களை வெளியிடுவார் எனவும் பிரதி நிதியமைச்சர் குணவர்த்தன சபையில் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## மின்விசிறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அண்மைக் காலமாகக் குடாநாட்டில் மின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-4-12-139)

## சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொலைச் சந்தேகநபர், கொலை நடந்த பின்னர் இந்த சிறைச்சாலை அதிகாரியின் வீட்டிலேயே மறைந்திருந்தார் எனக் கூறப்பட்டது.

கொலையாளியைக் கைதுசெய்வதற்காகப் பொலீஸார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர். (ஐ-4)


**LION AIR**

விமான சேவைமூலம் சௌகரியமான பயணம்
தினமும் காலை, மாலை இரு வேளை
யாழ் - கொழும்பு - யாழ்.
சென்று வர

| | | |
|---|---|---|
| விசேட வகுப்பு - | இரு வழிப் பயணம் | 6, 950/- |
| | ஒரு வழிப் பயணம் | 4, 000/- |
| சாதாரண வகுப்பு - | இரு வழிப் பயணம் | 4, 550/- |
| | ஒரு வழிப் பயணம் | 2, 425/- |

பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு
சிலிங்கோ ட்ரவல்ஸ் அன்டுவர்ஸ்
'செலான் வங்கிக் கட்டடம்'
560, 562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : No., 021 - 2225063


## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 12 - 12 - 1940
மறைவு 14 - 11 - 2001

### அமரர் வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

கணக்காளர் - நவ்(f)ல்ட் பாடசாலை, கைதடி.
பொருளாளர் - புனித மரியாளின் சேனை யாழ். கொமிசியம்.
தலைவர் - புனித மரியாளின் சேனை புனித யுவானியார் ஆலயம்.

அன்பின், பண்பின் இருப்பிடமாய்
அரவணைப்பின் உறைவிடமாய்
இன்சொல்லும் புன்சிரிப்பும் நிரந்தரமாய்
ஈகையிலே தனக்கோர் தனியிடமாய்
வாழ்க்கையிலே 'மனிதனாய்'
வாழ்ந்து காட்டி நின்றவரே!
ஆண்டொன்று சென்றதையா
ஆறவில்லை எம்மனங்கள்
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்!
ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

*28/1, சோமசுந்தரம் அவெனியூ,*
*யாழ்ப்பாணம்.*
*021 - 2222379*
(10052)

துயரில் வாடும்:
குடும்பத்தினர்


**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
By:- லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம் : 15.11.2002 FRI - 3.30
(MON, FRI - 3.30) (10588)



**NEW SCIENCE CENTRE**
வெலிங்டன் சந்தி அருகில்
**A/L 2004**
புதிய பிரிவு
ஆரம்பம் 9.11.02
PHY. - 6-7 a.m
By : சிவலிங்கம்
CHE. - 7-8. a.m.
By : அன்பழகன்
BIO. - 8-9- a.m.
By : தற்பரன்
C. Maths - 8-9 a.m.
By : பிரதீபன்
C.maths - 9-10 a.m
By : குமுக்கேசன்
★ CHE. பொது இரசாயன
மீட்டலுடன்
Inorganic Chemistry
(C/24788)



**இலவச சிகிச்சை**
எமது தந்தையார் ஆயுர்வேத வைத்தியர் அமரர் ஐயம்பிள்ளை கந்தையா (J.P.) அவர்களின் 4ஆம் ஆண்டு நினைவாக எமது வைத்திய நிலையத்தில் இன்று (14.11. 2002) இலவச சிகிச்சை வழங்கப்படும்.
Dr.கந்தையா சோதிதாசன்
முருகானந்தா வைத்திய நிலையம்
மாம்பழம் சந்தி,
அரியாலை. (10957)



**அம்பாள் ரவல்ஸ்**




* பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
* அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
* A/C, Non A/C வாகனத்துக்கு

அம்பாள் ரவல்ஸ்
கம்பஸ் லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)
திருநெல்வேலி,
222 2742, 0777-518319
(10504)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 1946 - 03 - 27
ஆண்டவன் அடியில் 2002 - 10 - 16

### அமரர் நவரத்தினம் இராசமலர்

எமது அன்புத் தெய்வம் அவர்கள் 16.10.2002 அன்று அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (14.11.2002) வியாழனன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மாணிக்கத்தியாகராசா வீதி,*
*சுன்னாகம்.*
குடும்பத்தினர்.
(10578)

## மரண அறிவித்தல்

### சண்முகம் தங்கம்மா

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான் சண்முகம் அவர்களின் மனைவியாரான திருமதி சண்முகம் தங்கம்மா அவர்கள் நேற்று (13.11.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.உருத்திரமூர்த்தி (மகன்)
(தவில்)

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*
(10981)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.